பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 வைகாசி 24 புதன்கிழமை (06-06-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:192

# மட்டு. காவத்தமுனையில் அதிரடி; 6 படையினர் பலி; 10 பேர் காயம்

## தொடர்ந்து நடந்த ஷெல் தாக்குதலில் இளைஞர் பலி; 15 முஸ்லிம்கள் காயம்

மட்டக்களப்பு,ஜுன்6

**மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள காவத்தமுனைப் பகுதியில் ரோந்து சென்ற படையினர் மீது நேற்றுக்காலை 8 மணியளவில் விடுதலைப் புலிகள் மறைந்திருந்து தாக்குதல் நடத்தியதில் ஆறு படையினர் பலியாகினர்; பத்துப் படையினர் காயமடைந்தனர். அதையடுத்து நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் சிக்கி முஸ்லிம் பொதுமகன் ஒருவர் உயிரிழந்தார்; 15 முஸ்லிம்கள் காயமடைந்தனர்.**

எம்.கே.சுபைர் (வயது 24) என்பவரே உயிரிழந்தவராவார்.

மட்டக்களப்பு நகரிலிருந்து வடக்காக 32 கிலோமீற்றரில் வாழைச்சேனை காகித ஆலைக்கு அருகில் காவத்தமுனை முஸ்லிம் கிராமம் உள்ளது. இக்காகித ஆலை வளாகத்தலேயே வாழைச்சேனை பிரதேசத்திற்குப் பொறுப்பான 232 பிரிகேட் படையணி அலுவலகம் அமைந்துள்ளது.

திங்கள் இரவு இக்காவலரணை நோக்கி விடுதலைப் புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகக் கூறப்படுகிறது. இதனையடுத்து செவ்வாய் காலை காவல் கடமைக்குச் சென்ற படையினர் காவலரணிலிருந்து சிறிது தூரம் சென்று தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டபோது அப்பகுதியில் மறைந்திருந்த விடுதலைப் புலிகள் இத்தாக்குதலை மேற்கொண்டனர் எனக் கூறப்பட்டது.

இத்தாக்குதலை அடுத்து படையினர் பதில் தாக்குதல் நடத்தினர். நாலாபுறமும் ஷெல் தாக்குதல்கள் இடம்பெற்றன. சுமார் ஒரு மணிநேரமாக படையினர் ஷெல் தாக்குதலை மேற்கொண்டதுடன் துப்பாக்கிப் பிரயோகமும் செய்தனர் என்று உள்ளூர் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஷெல்கள் பல காவத்தமுனை கிராமத்தில் வீழ்ந்து வெடித்துள்ளன. இதனால் காவத்தமுனையில் சில வீடுகளும் சேதமடைந்துள்ளன.

காவத்தமுனையில் வீழ்ந்து வெடித்த ஷெல்களால் காயமடைந்த 14 பேரின் பெயர் விவரம் வருமாறு:- நபீர் (21 வயது), எச்.எம்.அகமட் (44 வயது), மீராசாகிபு (30 வயது), ஜமால் (25 வயது), கமால்தீன் (25 வயது), மொகமட் அலியார் (45 வயது), புகாரி (33 வயது), மீராமுகைதீன் (25 வயது), ஆதம்லெப்பை (35 வயது), ரகுவத்தும்மா (41 வயது), ரகுமா (22 வயது), பாத்திமா (37 வயது), குழந்தையும்மா (44 வயது), ஜெமீலா (28 வயது).

காயமடைந்த இவர்கள் வாழைச்சேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். சிலர் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

பலியான படையினரின் சடலங்கள் பொலன்னறுவை வைத்தியசாலைக்கு

(14 ஆம் பக்கம் பார்க்க)

## காவத்துமுனையில் பதற்றம்; மீலாத் நிகழ்வுகள் இல்லை

மட்டக்களப்பு,ஜுன்6

காவத்தமுனை முஸ்லிம் கிராமம் மீதான ஷெல் தாக்குதல் சம்பவத்தை அடுத்து நேற்று அந்தப் பகுதியில் மக்கள் பதற்றநிலையில் காணப்பட்டனர் என்றும் மீலாத் நிகழ்வுகளில் அவர்கள் ஆர்வம் காட்டவில்லை என்றும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடைகள் அனைத்தும் பூட்டப்பட்டதுடன், மக்கள் நடமாட்டமும் குறைநது அப்பகுதி எங்கும் வெறிச்சோடிக் காணப்பட்டதாகவும் -

மட்டக்களப்பு, வாழைச்சேனைப் பகுதிகளில் இருந்து காவத்தமுனைப் பகுதிக்கான பஸ் சேவைகள் அனைத்தும் நேற்று பிற்பகலுடன் தடைப்பட்டிருந்ததாகவும் செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை -

ஷெல் வீச்சில் காயமடைந்தவர்களைப் பார்வையிடவென வாழைச்சேனை ஆஸ்பத்திரியில் பெரும் எண்ணிக்கையான முஸ்லிம்கள் கூடியிருந்தனர் என்று வாழைச்சேனையில் இருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

(க-7-21)



ஆறுநாள் விஜயத்தை மேற்கொண்டு இந்தியா சென்றிருக்கும் ஸ்ரீலங்கா எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் சென்னையில் தமிழக அரசின் தலைமைச் செயலகத்தில் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவைச் சந்தித்தபோது எடுக்கப்பட்டபடம்.

## பிரான்ஸிலும் 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வுக்கு ஏற்பாடு

கொழும்பு,ஜுன்6

தமிழ் மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்குமாறு வலியுறுத்தி எதிர்வரும் ஜுலை மாதம் பிரான்ஸ் நாட்டிலும் "பொங்கு தமிழ்" எழுச்சி நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன.

பிரான்ஸில் வாழும் தமிழ் மக்களை உள்ளடக்கிய பல்வேறு அமைப்புகள் இந்த "பொங்கு தமிழ்" எழுச்சி நிகழ்வை நடத்துவதற்காக அந்நாட்டில் வாழும் தமிழ் மக்கள் அனைவரையும் உணர்வுபூர்வமாக பங்களிப்பு செய்யுமாறு கோரியுள்ளன.

'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வுகளின்போது தமிழ் மக்களது தேசிய சுயநிர்ணய உரிமையையும், விடுதலைப் புலிகளின் தலைமைத்துவத்தையும் அங்கீகரிக்கக் கோரி அழுத்தம் கொடுப்பதற்காகக் கையெழுத்து வேட்டையொன்றும் ஆரம்பிக்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சியின் தேக்க நிலையால்
## சொல்ஹெய்மைச் சந்திப்பதை தவிர்த்துவருகிறார் பாலசிங்கம்?

லண்டன்,ஜுன்6

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் நடுவராக செயற்பட்டு வரும நோர்வேத் தூதுவர் எரிக் சொல்ஹெய மிற்கு -

இந்த விவகாரத்தில் தாம் வழமையாகத் தொடர்புகொள்ளும் புலிகளின் அரசியல் ஆலோசகரான அன்ரன் பாலசிங்கத்தை சந்திப்பதற்குக் கூட பிரச்சினைகள் இருப்பதாக, சில செய்திகளை மேற்கோள்காட்டி சர்வதேச செய்தி ஏஜென்சி ஒன்று நேற்று மாலை தகவல் வெளியிட்டது.

அது உண்மையானால் -

இதுவரை காலமும் நோர்வேயின் ஏற்பாட்டில் பேச்சு பேச்சென்று நடந்து வந்த சமாதான முயற்சிகள் பலன் ஏதுமின்றி தேக்கநிலையை அடைந்திருப்பதால் சீற்றமடைந்திருக்கும் விடுதலைப் புலிகள், சமாதான முயற்சியின் அடுத்த கட்ட நடவடிக்கையாக - ஆக்கபூர்வமான - முன்னகர்வுகள் ஏதும் எடுக்கப்படுவது பற்றிக் கோடி காட்டினால் அன்றி சமாதான முயற்சியில் ஈடுபாடுகாட்டுவதில்லை என்ற முடிவை எடுத்துவிட்டதாகக் கருதலாம்.

இதன் காரணமாகவே, சமாதான முயற்சிகள் தொடர்பாக ஆக்கபூர்வமான முன்னகர்வுகள் பற்றிய சமிக்ஞை கிடைக்கும் வரை நோர்வேயின் பிரதிநிதிகளுடன் சமாதான முயற்சிகள் தொடர்பாக பேசுவதை தவிர்ப்பது என்ற முடிவையும் தொடர்புக்கு இடமளிக்காமல் நழுவிடும் போக்கையும் புலிகளின் லண்டன் பிரிவு பின்பற்றுவதாகக் கருதப்படுகின்றது. (உ)

## மன்னார், இரத்தினபுரி ஆயர்கள் நேற்று சொல்ஹெய்முடன் பேச்சு

ஒஸ்லோ,ஜுன்6

ஐரோப்பிய விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கையிலிருந்து புறப்பட்டுச் சென்ற இரத்தினபுரி ஆயர் மல்கம் ரஞ்சித், மன்னார் ஆயர் இராயப்பு யோசெப் ஆகியோர் நேற்று ஒஸ்லோவில் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மைச் சந்தித்துப் பேசினர்.

தடைப்பட்டுப் போயிருக்கும் சமாதான முயற்சிகளை முன்னகர்த்துவதற்கான வாய்ப்புக்கள் குறித்து ஆயர்கள், நோர்வேத் தூதருடன் கலந்தாலோசனை செய்ததாகக் கூறப்படுகின்றது.

தமது ஐரோப்பிய சுற்றுப் பயணத்தின் போது லண்டனில் புலிகளின் பிரமுகர்களைச் சந்திப்பதற்கு இரு ஆயர்களும் விரும்பினார்கள் என்றாலும்கூட, அதற்குப் புலிகள் தரப்பில் 'பச்சைக் கொடி' காட்டப்படவில்லை என்று தெரியவருகின்றது. (உ)

## தியாகி சிவகுமாரன் நினைவாக
## வன்னியில் மாணவர் எழுச்சிநாள் உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு

வவுனியா,ஜுன்6

விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பு ஏற்பாடு செய்த மாணவர் எழுச்சி தினம் இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் நேற்று உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டதாக 'புலிகளின் குரல் வானொலி' நேற்றிரவு தெரிவித்தது.

1974 ஆம் ஆண்டு படையினரின் சுற்றிவளைப்பின் போது சயனைட் அருந்தி உயிர்துறந்த தியாகி சிவகுமாரனின் நினைவு தினத்தை மாணவர் எழுச்சி நாளாக விடுதலைப் புலிகள் அனுஷ்டித்து வருவது தெரிந்ததே.

பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள் மற்றும் பொது நிறுவனங்களில் நேற்று பல்வேறு கலை நிகழ்வுகள் இடம்பெற்றன எனவும -

பாடசாலை மாணவர்கள் பங்கு கொண்ட பேரணிகள் வன்னியின் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெற்றன எனவும் -

புலிகளின் குரல் வானொலி மேலும் தெரிவித்தது.

(க-7-6)

## புலிகள் மீதான தடையை நீக்க அரசு ஒருபோதும் முன்வராது
### மீண்டும் நீதியமைச்சர் வலியுறுத்தல்

கொழும்பு,ஜுன்6

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குமாறு தமிழ்க்கட்சிகள் கோரி வந்தாலும், அரசாங்கம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் புலிகள் மீதான தடையை நீக்க முன்வராது - நீக்கவும் முடியாது என்று நீதி அமைச்சர் பட்டி வீரக்கோன் மீண்டும் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

இவ்வாறு வெளிநாட்டு செய்தி ஊடகம் ஒன்று நேற்று செய்தி வெளியிட்டது.

விடுதலைப் புலிகள் அமைப்பு பயங்கரவாத அமைப்பாகும். இந்த நிலையில் அந்த அமைப்பு மீதான தடையை நீக்கினால் புலிகள் பயங்கரவாதிகள் அல்லர் என்பதை நாம் ஏற்றுக்கொண்டதாகவும் அமைந்து விடும்.

விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்பதையும் எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்காமல் அவர்களை பேச்சுக்கு அரசாங்கம் அழைக்கும் போது ஏற்ப

(14 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்



யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகத்தின் அறுபதாம் ஆண்டு (வைர) விழா நிகழ்வு நேற்று யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்றது. உயர்கல்வித் துறையில் புதியவாய்ப்பு, வசதிகளை ஏற்படுத்தியமைக்காக இந்த நிகழ்வின் போது யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை றோட்டறிக் கழகத்தினால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். நேற்றைய நிகழ்விற்குப் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட றோட்டறி ஆளுநர் கிரீஷ் ராஜேந்திரன் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளைக்கு விருது வழங்குவதையும், யாழ்.றோட்டறிக் கழகத்தில் புதிதாக இணைந்து கொண்ட கலாநிதி எஸ்.ஜே.பி.இராஜேஸ்வரனுக்கு ஆளுநர் றோட்டறிப் பதக்கத்தைச் சூட்டுவதையும் காணலாம்.



வைரவிழா நிகழ்வில் கலந்துகொண்ட ஆளுநர் மற்றும் ஆளுநரின் குழுப் பிரதிநிதி கே.கேதீஸ்வரன் ஆகியோருக்கு யாழ்.றோட்டறிக் கழக ஞாபகார்த்தப் பரிசுகளை கழகத்தின் முன்னாள் தலைவர் ஈ.சரவணபவன் வழங்குகின்றார்.



வைரவிழா நிகழ்வில் தலைமையுரை நிகழ்த்தும் யாழ்.றோட்டறிக் கழகத் தலைவர் அ.பஞ்சலிங்கம், வாழ்த்துரை நிகழ்த்தும் லயன்ஸ் கழக மாவட்ட பிரதிநிதி என்.பத்மநாதன், றோட்டறிக் கழக ஆளுநர் கிரீஷ் ராஜேந்திரன் ஆகியோர்.




நேற்றைய விழா மேடையின் தோற்றம்.



வைரவிழாவில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினர்.

(படங்கள்: கொனிகா கலர் லாப்)

### தொலைத் தொடர்பு கோபுரப் பணி முடிவு:

# வானொலிக் கருவிகள் வந்து சேர்ந்ததும் மேலும் 400 இணைப்புகள் வழங்கப்படும்

## ரெலிகொம் அதிகாரி தகவல்

யாழ்ப்பாணம்,ஜூன்6

பண்ணைப் பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள 600 அடி உயரமான நுண்அலைத் தொலைத் தொடர்பு கோபுரத்தின் மூலம் குடாநாட்டுக்கு மேலும் 400 தொலைபேசி இணைப்புகளை எதிர்வரும் நவம்பர் மாதம் வழங்கமுடியும்.

- இவ்வாறு ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

600 அடி உயரமான நுண்அலைத் தொலைத் தொடர்பு கோபுரம் நிர்மாணிக்கப்பட்டு விட்டது. இதில் பொருத்துவதற்கான வானொலி உபகரணங்கள் கொழும்பில் இருந்து எடுத்து வரவேண்டியுள்ளன. இவற்றை எடுத்து வந்து எதிர்வரும் நவம்பர் மாதத்திற்குள் பொருத்துவதற்கு நாம் திட்டமிட்டுள்ளோம்.

இந்தப் பணிகள் அனைத்தும் பூர்த்தியடைந்தால், 300 மோட்டோறோலா தொலைபேசி இணைப்புகளையும் 100 கேபிள் தொலைபேசி இணைப்புகளையும் புதிதாக வழங்க முடியும்.

அதேசமயம் தற்போது யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையிலான தொலைபேசிச் சேவைகளும் அடிக்கடி சீர்குலைந்து வருகின்றன. புதிய தொலைத்தொடர்பு கோபுரம் சீராக இயங்க ஆரம்பித்தால், நிலைமை சீரடைந்து விடும் என்று அவர் கூறினார். (க-6)

### உடுவில் பகுதியில் கலாசார மண்டபம் அமைக்க நிதியுதவி

வலிகாமம் தெற்கு,ஜூன்6

உடுவில் பெரியகுளத்தடியில் அமைந்துள்ள நாகதம்பிரான் ஆலயத்துக்கு அருகில் கலாசார மண்டபம் ஒன்று அமைப்பதற்கான அடிக்கல் நடும் வைபவம் அண்மையில் நடைபெற்றது.

இக் கலாசார மண்டபம் அமைப்பதற்கும், சலவைத தொழிலாளர்களுக்கான இளைப்பாறறு மண்டப திருத்த வேலைகளுக்கும் என அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் நிதி உதவித் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கலாசார மண்டப அடிக்கல் நடும் வைபவத்தில் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகப் பிரதிநிதிகள், யாழ்ப்பாண மாவட்ட பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் பாலகிருஷ்ணன், வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் க.கேதீஸ்வரன் , உதவித் திட்டமில் பணிப்பாளர் த.தேவராஜன் உட்பட பல பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

கலாசார மண்டப அமைப்புக்கும், இளைப்பாற்று மண்டபத்திருத்த வேலைகளுக்கும் அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம் 3 லட்சத்து 72 ஆயிரத்து 500 ரூபாவை வழங்கி உள்ளது. (க-152)

### நபிகள் நாயகத்தின் பிறந்த தின நிகழ்வுகள்

நபிகள் நாயகம் முகம்மது நபி (ஸல்) அவர்களின் பிறந்த தினமான நேற்று யாழ்.முஸ்லிம்கள் நகரில் விசேட நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருந்தனர்.

யாழ்.பெரிய கடையிலுள்ள ஜும்மா பள்ளிவாசலில் அன்னதானம் வழங்கப்பட்டது.

யாழ்.ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும் குழந்தைகளுக்கு உடுபுடைவைகள், இனிப்புப் பொட்டலங்களும் வழங்கப்பட்டன.

இடம்பெயர்ந்த யாழ்.முஸ்லிம்களின் அமைப்பு இந்த நிகழ்வுகளை ஒழுங்கு செய்திருந்தது. (க-7)

# கல்வயலில் படையினர் மீட்ட ஒரு தொகைப் பணம் கையளிப்பு

## பலாலி படைத் தலைமையகம் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்6

சாவகச்சேரி கல்வயல் கிராம அலுவலர் (ஜே/305) பிரிவில் இருந்து கடந்த மாதம் 31ஆம் திகதி மீட்கப்பட்ட ஒரு தொகுதிப் பணத்தை படையினர் உரியவரிடம் கையளித்துள்ளனர். என யாழ்.பாதுகாப்புப் படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

கல்வயல் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த தம்பிமுத்தையா என்பவருக்குச் சொந்தமான ஒரு லட்சத்து 70 ஆயிரம் ரூபாவே இவ்வாறு 522 ஆவது படையணியினரால் கையளிக்கப்பட்டுள்ளது. என்றும் -

522 ஆவது படையணியின் சிவில் .நிர்வாக அலுவலகத்தில் நடைபெற்ற இந்தப் பணக் கையளிப்பு நிகழ்வில் சிவில் நிர்வாக இணைப்பதிகாரி, கல்வயல் கிராம அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டனர் எனவும் -

பலாலி படைத் தலைமையகம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொது மக்களுக்குச் சொந்தமான பொருள்களை அவர்களிடம் மீண்டும் ஒப்டைக்கும் பணியில் படையினர் தொடர்ந்தும் ஈடுபடுவர் என்றும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-7)

### பம்பலப்பிட்டி பொலீஸாரால் கைதான

# யாழ்., வவுனியா பெண்கள் மீது மோசமான பாலியல் சித்திரவதை

## சட்ட மருத்துவ அதிகாரி அறிக்கை

கொழும்பு,ஜூன்6

பம்பலப்பிட்டி ஹேக் வீதி விடுதியில் வைத்து கைது செய்யப்பட்ட சாவகச்சேரி கல்வயல் யுவதியும் வவுனியாவில் வைத்து கைது செய்யப்பட்ட இறம்பைக்குளம் யுவதியும் தங்களை பம்பலப்பிட்டி பொலீஸார் பாலியல் சித்திரவதைக்கு உட்படுத்தியதாக மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்குப் புகார் செய்துள்ளனர்.

அதை அடுத்து இவர்கள் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு, மிக மோசமாக பாலியல் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாக கொழும்பு சட்ட மருத்துவ அதிகாரி அறிக்கை சமர்ப்பித் துள்ளார்.

சாவகச்சேரி கல்வயலைச் சேர்நத கந்தையா சிவரஞ்சினி (21 வயது), வவுனியா இறம்பைக்குளத்தைச் சேர்ந்த திருமதி விமலாதேவி ராமச்சந்திரன் (39 வயது) ஆகிய இருவரும் விசாரணைக்கென தடுத்து வைககப்பட்ட போது மிக மோசமாக பாலியல் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டதாக புகார் செய்திருந்தனர்.

பிரஸ்தாப இரு பெண்களினதும் நலனைக் கவனிப்பதற்காக இவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த இடத்துக்குச் சென்ற சட்டத்தரணியான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் விநாயகமூர்த்தி மேற்படி பாலியல் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டதை அறிந்து மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் இதுபற்றி அறிவித்துள்ளார்.

மனித உரிமைகள் ஆணைக் குழுவைச் சேர்ந்த அதிகாரி மனோகரி, பொலீஸ் தடுப்புக் காவல் சிறைக்குச் சென்று பிரஸ்தாப பெண்கள் இருவரையும் விசாரணை செய்த போது அவர்கள் பாலியல் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டதாக தெரிவித்தார்கள்.

இதையடுத்து இரு பெண்களையும் கொழும்பு சட்ட மருத்துவ அதிகாரியிடம் ஆஜர் செய்து மருத்துவ பரிசோதனை செய்விக்குமாறு மனோகரி கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து நடத்தப்பட்ட மருத்துவ பரிசோதனையில் இரு பெண்களும் மிக மோசமாக பாலியல் சித்திரவதைகக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாக சட்ட மருத்துவ அதிகாரி அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

இதனை அடுத்து பொலீஸார் மீது அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கு தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைகளை விநாயகமூர்த்தி மேற்கொண்டு வருகிறார்.

பிரஸ்தாப பெண்களில் சிவரஞ்சனி என்பவர் ஹேக் வீதி விடுதியில் தங்கியிருந்த போதே அதன் முகாமையாளரும் 3 சிற்றூழியர்களும் தம்மை புலி என்று பொலீஸில் பிடித்துக் கொடுக்கப் போவதாக பயமுறுத்தி தம்முடன் பாலியல் வல்லுறவு கொணடதாக பொலீஸாரிடம் தெரிவித்திருந்தார். இதனையடுத்து கைது செயயப்பட்ட விடுதி முகாமையாளர் கருணாகரன் (30 வயது), சிற்றூழியர்களான திருநாவுக்கரசு இராஜேந்திரன் (30 வயது), கனகலிங்கம் செந்தூரன் (வயது 20), யோகராசா மஹிந்தன் (வயது 20) ஆகிய நால்வரும் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (க)

### இலங்கையில் நாளை துக்கதினம் அனுஷ்டிப்பு

கொழும்பு,ஜூன்6

நேபாள நாட்டின் மன்னர் திபேந்திரா மற்றும் அவரது குடும்பத்தினரின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக நாளை வியாழக்கிழமை தேசிய துக்க தினமாக அனுஷ்டிக்குமாறு இலங்கை அரசு அறிவித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே துக்கதினம் அனுஷ்டிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. இது பொது விடுமுறை தினம் அல்ல எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து அரச திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்களில் அஞ்சலி செலுத்தும் முகமாக தேசியக் கொடியை அரைக் கம்பத்தில் பறக்க விடுமாறும் அரசாங்கம் அறிவித்துள்ளது. (க-6)

# யாழ்.சைவ பரிபாலன சபையின் பரிசளிப்பு, பட்டமளிப்பு விழா

யாழ்ப்பாணம்,ஜூன்6

யாழ்.சைவபரிபாலன சபையினரால் கடந்த வருடம் நடத்தப்பட்ட சைவ நெறித்தேர்வு, சைவசித்தாந்த பண்டிதர் பட்டப் பரீட்சை ஆகியவற்றில் சித்திபெற்றவர்களுக்கான பட்டமளிப்பும் பரிசளிப்பு விழாவும் இம்மாதம் 10 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு நீராவியடியில் உள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.சைவபரிபாலன சபையின் தலைவர் இ.மகேந்திரன் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக இந்துநாகரிகத் துறைத் தலைவர் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார்.

சைவ சித்தாந்த பிரவேச பண்டிதர், பாலபண்டிதர், பண்டிதர் பட்டப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு இந்த நிகழ்வில் பட்டமளித்து சான்றிதழ் வழங்கப்படும்.

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதியும், "இந்துசாதனம்" பத்திரிகையின் ஆசிரியருமான பேராசிரியர் இ.குமாரவடிவேல் "கல்வியின் நோக்கம்" என்ற பொருளில் சிறப்புரையாற்றுவார்.

சைவ பரிபாலன சபையின் பரீட்சைச் செயலாளர் சைவப்புலவர் வ.கந்தசாமி நிகழ்வுகளை ஒழுங்கு படுத்துவார். (க-7)

உதயன்

## நிலை மாறாவிடில் பேருதவியாகும்

இலங்கை நாடாளுமன்றத்தில் - ஆட்சி மன்றத்தில் - பிரதான எதிர்க் கட்சியாக விளங்குவது ஐக்கிய தேசியக் கட்சி. தொடர்ந்து பதினேழு வருடங்கள் ஆட்சிக் கட்டிலில் இருந்து கோலோச்சிய அக்கட்சி, கடந்த இரண்டு பொதுத் தேர்தல்களிலும் தோல்வி அடைந்து, ஏழு வருடங்களாக எதிரணியாக அமர்ந்திருக்கிறது.

அந்தக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ளார். அவர் தாமாக விஜயம் செய்துள்ளார் என்பதனைவிட அங்கு வருமாறு அழைக்கப்பட்டார் என்று கூறுவதே பொருத்தம் என்று அரசியல் நோக்கர்கள் தெரிவிக்கிறார்கள்!

அரசு - விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுக்களுக்கான முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இவ்வேளையில், அரசின் மீது நம்பிக்கை இல்லாப் பிரேரணை, அது இது என்று குழப்பவேண்டாம் என்று புத்திமதி கூறுவதற்காகவே ரணில் அழைக்கப்பட்டார் எனவும் அவர்கள் நிச்சயமாகக் கூறுகின்றனர்.

அது சரியோ பிழையோ, எப்படியோ, அவர் தமிழகம் உட்பட இந்தியா சென்று அங்குள்ள அரசியல் தலைவர்களுடன் பேச்சுக்கள் நடத்தியிருக்கிறார். சமாதான முயற்சிகள் குறித்த தமது நிலைப்பாடுகளையும் வெளிப்படுத்தி இருக்கிறார். வேறு விடயங்கள் குறித்தும் கலந்துரையாடி உள்ளார்.

புதுடில்லியில் மத்திய அரசு அமைச்சர்களுடனும் ஏனையோருடனும் தமிழகத்தில் முதல்வர் ஜெயலலிதாவுடனும் கலந்துரையாடிய பின்னர், ரணில் விக்கிரமசிங்க வெளியிட்டுள்ள தமது கட்சியின் நிலைப்பாடுகள் கருத்தில் கொள்ளத்தக்கவை.

★ இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக அரசாங்கமும் விடுதலைப் புலிகள் இயக்கமும் நடத்தும் எந்தப் பேச்சையும் ஐக்கிய தேசியக் கட்சி வரவேற்கிறது. சமாதான முயற்சி எந்த வடிவத்தில் அமைந்தாலும் அதனை வரவேற்போம்.

★ அரசு - புலிகள் பேச்சுவார்த்தை முயற்சிகள் - சமாதான முயற்சிகள் - வெற்றி பெறுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியிடம் இருந்து எதிர்பார்க்கப்படும் ஒத்துழைப்பை வழங்குவதற்கு அது தயாராக உள்ளது.

★ சமாதான முயற்சி வெற்றி அடைந்து ஓர் உடன்பாடு ஏற்பட்டால் அதற்கு ஐக்கிய தேசியக் கட்சி முழு ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்கும்.

இந்த மூன்று நிலைப்பாடுகளும், மயக்கம் எதுவுமின்றி, வெகு தெளிவுற எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இந்திய மண்ணில் நிற்கும்போது மட்டுமே இந்தக் கருத்துக்கள்; கொழும்பு வந்ததும் அவை தளும்பும் அல்லது மாறும் என்றில்லாவிடில் மிகவும் வரவேற்கத்தக்கவையே

நாட்டின் மிகப் பெரிய தேசிய பிரச்சினையான இனவிவகாரத்திற்குத் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதெல்லாம் - ஆட்சியில் உள்ள அரசாங்கங்கள் முயன்றபோதெல்லாம் - அவ்வேளைகளில் எதிர்க் கட்சியாக நிற்பவை ஏதோ ஒரு வகையில் தடைக்கல் போட்டுவிடுவது வழக்கம்.

ஐக்கிய தேசியக் கட்சியின் முந்திய சந்ததித் தலைவர்கள் இதில் மிகவும் கைதேர்ந்தவர்கள் மட்டுமன்றி குள்ளத்தனம் மிகுந்தவர்களாகவும் காணப்பட்டனர். இளந் தலைமுறைத் தலைவர்கள் அவ்வாறன்றி, நாட்டு நலன் கருதி, இனப்பிரச்சினைக்கு நீதியான தீர்வு ஒன்றைக் காண ஒத்துழைக்க வேண்டும், ஆதரவளிக்க வேண்டும் என்றே தமிழ் மக்கள் எதிர்பார்க்கிறார்கள்; விரும்புகிறார்கள்.

தேசிய ஒருமைப்பாடு என்பது ஒற்றையாட்சியே; அதன் அடிப்படையிலேயே தீர்வு அமையவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் இப்போதைய தலைவர்கள் கொழும்பு மண்ணில் மிதித்த பின்னர் கூறாவிடின், எல்லாம் நல்லனவாக நடைபெறப் பேருதவியாக இருக்கும். பொறுத்திருந்து பார்ப்போம்.

# தும்பளை அகதி முகாம் விஷமிகளால் தீக்கிரை

யாழ்ப்பாணம்,ஜூன்6

தும்பளையில் இடம்பெயர்ந்தோர் தங்கியிருந்த அகதிகள் முகாம் ஒன்று கடந்த சில நாளகளுக்கு முன் இனந்தெரியாத சில விஷமிகளால் தீ வைத்துக் கொளுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

நாகர்கோயில் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து தும்பளையில் வசித்து வரும் அகதிகளின் முகாமே கடந்த முதலாம் திகதி விஷமிகளினால் தீக்கிரையாக்கப்பட்டது.

மாலை 6.45 மணிக்கு இடம்பெற்ற இத்தீவிபத்துப் பற்றித் தகவலறிந்த இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க, பருத்தித்துறைக் கிளையின் தீயணைகக்கும் பிரிவினர் உடன் அந்த இடத்துக்கு விரைந்து தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

சுமார் 6 குடும்பங்கள் வாழ்ந்த இம்முகாம் தீயில் எரிந்து நாசமானதை அடுத்து இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க பருத்தித்துறைக் கிளை அவர்களுக்கு உடனடியாக பிளாஸ்ரிக்கினாலான கூரைச் சீலைகளை வழங்கியது. அத்துடன், தீயில் சேதமடைந்த அவர்களின் பாவனைப் பொருள்களுக்குப் பதிலாக புதிய பாவனைப் பொருள்களையும் வழங்கியது. (ம-15)

## தலைமைத்துவப் பயிற்சி நெறி

சண்டிலிப்பாய்,ஜூன்6

வடக்கு-கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பணிமனையினால் நடத்தப்படும் இவ்வருடத்திற்கான கிராமிய மட்ட தலைமைத்துவப் பயிற்சி நெறி இம்மாத இறுதியில் நடைபெறவுள்ளது.

நான்கு தினங்கள் நடைபெறவுள்ள இப்பயிச்சி நெறியில் இப்பிரிவிலுள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்கள்,மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியவற்றிலிருந்து தலா ஒரு உறுப்பினர் வீதம் பங்கு பற்றுவார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. இதற்கான ஏற்பாடுகளை சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா.வேதநாயகன் மேற்கொண்டு வருகிறார். (ம-135)

## நாட்டு நடப்பு

"கொட்டனும் கையுமாய்
எங்கயடி உவன் போறான்?"
"கொட்டில் ரியூட்டறிக்குக்
கொண்டு போறான் கொழுப்பேறி
வாத்திக்கு இப்ப கொஞ்சம்
வாய் முத்திப் போச்சுதாம்
காத்திருக்கிறானாம் தம்பி
கட்டாயம் ஒன்று போட!"

- விகடகவி.

### அரசமைப்பு சீர்திருத்தத்தை மீண்டும் சமர்ப்பிக்கும்

# அரசாங்கத்தின் முயற்சியை ஐக்கிய தேசியக் கட்சி எதிர்க்கும்

## காமினி அத்துக்கோறளை தெரிவிப்பு

கொழும்பு,ஜூன்6

அரசமைப்பு சீர்திருத்தத்தை மீண்டும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க பொ.ஐ.மு.அரசு எடுத்துவரும் முயற்சிகளை ஐ.தே.க. கடுமையாக எதிர்க்கும் என அதன் உபதலைவர் காமினி அத்துக்கோறளை தெரிவித்துள்ளார்.

புலிகள் பேச்சுக்கு வந்தாலென்ன வராவிட்டாலென்ன புதிய அரசியல் யாப்பினை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துச் சட்டமாக்குவோம் என ஜனாதிபதி சந்திரிகா சில தினங்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தார். இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கும் போதே அரசின் அரசியல் யாப்பு யோசனைகளை ஐ.தே.க. எதிர்க்கும் என காமினி அத்துக்கோறளை தெரிவித்தார்.

பொ.ஐ.மு. அரசு தனக்கெதிராகக் கொண்டுவரப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காகவே இத்தகைய செயலில் ஈடுபட்டு வருவதாகவும் இது ஒரு கண்துடைப்பு வித்தை என்றும் காமினி அத்துக்கோறளை மேலும் தெரிவித்தார். (ம-4-5)

# கிளாலி கடற்படை முகாம் புலிகளின் முக்கிய இலக்காம்

கொழும்பு,ஜூன்6

கிளாலியிலுள்ள கடற்படை முகாம் விடுதலைப் புலிகளின் முக்கிய இலக்க்க அமைந்துள்ளது என மூத்த கடற்படை அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

யாழ்.கடல்நீரேரி ஊடாக குடாநாட்டைக் கைப்பற்றும் புலிகளின் திட்டத்திற்கு இந்த முகாம் பெரும் தடையாக இருப்பதால் புலிகளின் முக்கிய இலக்காக இந்த முகாம் இருப்பதாகவும் -

யாழ்.கடல்நீரேரி ஊடாக குடாநாட்டுக்கான புலிகளின் கடல் வழிப் போக்குவரத்திற்கு இந்த முகாம் பெரும் தடையாக இருப்பதால் அவர்களின் மிக முக்கிய இலக்காக இந்த முகாம் அமைந்துள்ளதாகவும்-

சமாதான பேச்சுக்கள் ஆரம்பமாவதற்கு முன்னர் யாழ்நகரை கைப்பற்றும் நோக்கில் பெருமெடுப்பில் பூநகரிப் பகுதியில் பயிற்சிகளை மேற்கொண்டுவரும் புலிகள் அதற்கு முன்னர் கிளாலி கடற்படை முகாமை அழிப்பதற்கு தயாராகி வருவதாக புலனாய்வுப் பிரிவின் தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் - அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ம)

# பலாலி ஆசிரியர் கலாசாலையை வசதியான இடத்துக்கு மாற்ற முயற்சி

கோண்டாவில்,ஜூன்6

பலாலி ஆசிரிய பயிற்சி கலாசாலையை வசதியான இடத்திற்கு மாற்றுவதற்கு வேண்டிய முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை கலாசாலை நிர்வாகம் மேற்கொள்ளத் தொடங்கியுள்ளது.

மல்லாகம், தெல்லிப்பழைப் பகுதியில் கலாசாலைக்கான இட வசதிகள் இருக்கின்றனவா என்று ஆராயப் பட்டுவருகின்றது.

இதேவேளை -

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை இயங்குவதற்கு வேண்டிய வசதிகளைத் தான் ஏற்படுத்தித் தருவதாக வலி. வடக்குப் பிரதேச சபைத் தலைவர் திருமதி பா.ஸ்ரீபாஸ்கரன் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார். (ம-86)

## கலந்துரையாடல்

கொழும்புத்துறை,ஜூன்6

கொழும்புத்துறைப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் அங்கு மீண்டும் குடியமர்வது தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் கொழும்புத்துறை ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளது.

மேற்படி கலந்துரையாடல் கடந்த 2 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவிருந்தது எனினும் தவிர்க்க முடியாத காரணங்களால் அது ஒத்திவைக்கப்பட்டது

இக்கலந்துரையாடலில் இடம்பெயர்ந்த கொழும்புத்துறைப் பகுதி மக்கள் மீளக்குடியமர்வது தொடர்பாகவும், அங்குள்ள இந்து, கிறிஸ்தவ ஆலயங்கள் புனரமைத்து பூஜை வழிபாடுகளை ஆரம்பிப்பது தொடர்பாகவும் மக்கள் தமது தொழில்களை மேற்கொள்வதற்குரிய சிரமங்களை அகற்றுவது குறித்தும் ஆராயப்பட உள்ளது.

இக்கலந்துரையாடலில் வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந.திரிலோகநாதனும் கலந்து கொள்வார். (ம)

## நாளை

வைகாசி 24
வியாழக்கிழமை
திதி: பிரதமை
முற்பகல் 8.15 வரை
நட்சத்திரம்: மூலம்
பின்னிரவு 1.11 வரை.
திருஞானசம்பந்தர் குருபூசை
சுபநேரம் : 7.22 - 8.52
ராகுகாலம் : 1.22 - 2.52
(பழைய நேரப்படி)

# ஜி.சீ.ஈ .சாதாரண தரப் பரீட்சையில் மாற்றம் கொண்டுவரத் திட்டம்

## தேசிய கல்வி ஆணைக்குழு சிபாரிசு

கொழும்பு,ஜூன்6

2003ஆம் ஆண்டில் இருந்து நடைமுறைக்கு வரவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைத் திட்டத்தில் மாற்றங்களைக் கொண்டு வருவது தொடர்பாக கல்வி அமைசசு கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி பரீட்சைக்கான முக்கிய 8 பாடங்களை 6 ஆகக் குறைக்குமாறும் மேலதிக 24 பாடங்களில் தாம் விரும்பும் 3 பாடங்களை மாணவர்கள் தெரிவு செய்வதற்கு வாய்ப்பளிக்குமாறும் தேசியக் கல்வி ஆணைக்குழு கல்வி அமைச்சுக்கு சிபாரிசு வழங்கியுள்ளது.

மொழி, ஆங்கிலம், கணிதம் I அல்லது கணிதம் II, விஞ்ஞானமும் தொழில்நுட்பமும், சமூகக் கல்வி, சமயம் ஆகியன முக்கிய பாடங்களாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளன.

தற்போது முக்கிய பாடங்களான அழகியற்கலை மற்றும் தொழில் நுட்பம் ஆகியனவற்றை உத்தேச திருத்தத்தின் மூலம் முக்கிய பாடங்களின் பட்டியலில் இருந்து நீக்கப்படும் எனவும் கல்வி அமைச்சைச் சேர்ந்த மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பௌதிகம், இரசாயனம், உயிரியல், பிரயோககணிதம், புவியியல், வரலாறு, சமூகக் கல்வி, குடியுரிமை பற்றிய கல்வி, வேற்று மொழி, ஆங்கில இலக்கியம், விவசாயம், மின்னியலும் இலத்திரனியலும், இயந்திரவியல், கை வேலை, சித்திரமும் சிற்பமும், உணவுத் தொழில்நுட்பம், தகவல் தொழில் நுட்பம், வர்த்தகம், கலாசார நடன நாடகம் மற்றும் நாடகக் கலை ஆகிய பாடங்கள் மேலதிக பாடங்களாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஏதாவது 3 பாடங்களை பரீட்சார்த்தி ஒருவர் முக்கிய பாடங்களுக்கு மேலதிகமாக தேர்ந்தெடுக்க வேண்டும்.

இந்தத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் இவ்வாரம் கல்வி அமைச்சில் நடைபெறவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

பரீட்சைக்கான முக்கிய பாடங்களின் எண்ணிக்கையில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என தேசிய கல்வி ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் லக்ஷ்மன் ஜயதிலக தெரிவித்தார். (ம)

## உதயவாக்கு

கல்வியில் செருக்கடைதல் முதன்மையான அறியாமை.


கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



கண்ணிகள் குறித்த அடையாளங்கள், எச்சரிக்கைகளை சிந்தை கொள்ளத் தவறுவோர் தம்வாழ்வின் அடையாளத்தைத் தொலைக்கவும் நேரிடலாம் என்பதனை மறந்துவிடலாகாது.

# செய்தித் தணிக்கை அமுலில் இருந்தபோதே போரில் புலிகள் வெற்றிகளைக் குவித்தனர்

''யுத்தம் தொடர்பான செய்திகள் புலிகளைச் சென்று அடைந்துவிடும் என்பதற்காகவே தணிக்கை கொண்டு வரப்பட்டது என அரசு தெரிவித்தபோதிலும் செய்தித் தணிக்கை நடைமுறையில் இருந்த, கடந்த 3ஆண்டுகளிலேயே புலிகள் மிகப் பெரும் வெற்றிகளை ஈட்டினர். எனவே அரசின் இந்த நோக்கம் ஈடேறவில்லை'' என்கிறார் பத்திரிகையாளரும் பிரபல சிந்தனையாளருமான சுனந்த தேசப்பிரிய. 'ஞாயிறு லங்காதீப' பத்திரிகையில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.

''உண்மையைப் பூமியில் புதைத்தால் அது ஒரு நாள் வெடிக்கும். மிகவும் கஷ்டப்பட்டே அது மூச்சுவிடும். இதன் மூலம் அது எவ்வளவு வெடிக்கும் ஆற்றலைப் பெறுகிறது என்பது அது வெடிக்கும் போது அனைத்தும் தவிடு பொடியாவதிலிருந்து தெரியவரும்'' என ஐரோப்பாவில் கைத்தொழில் புரட்சி ஏற்பட்டவேளையில் பிரெஞ்சு கதாசிரியரான எமில் சோலா குறிப்பிட்ட கருத்தானது யதார்த்தமானதாகும். எமில் சோலா வெறுமனே கதாசிரியர் அல்லர். செய்திச் சுதந்திரத்திற்காகத் தனித்துநின்று போராடியவர். உண்மை மறைக்கப்படுவதையும், புதைக்கப்படுவதையும் எதிர்த்த அவர் செய்தித் தணிக்கையைக் கடுமையாக எதிர்த்தவர்.

சிறிலங்காவில் யுத்தம் தொடர்பாக விதிக்கப்பட்டிருந்த செய்தித்தணிக்கையை நீக்குவது என கடந்த மாதம் 30 ஆம் திகதி அரசு தீர்மானித்தது. அதற்கு முதல் நாள் நடைபெற்ற சுதந்திர ஊடகவியலாளர்களின் 8 ஆவது ஆண்டுக் கூட்டத்தில் தொடர்ந்து நடைமுறைப் படுத்தப்பட்டு வந்த செய்தித் தணிக்கையை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வது எனத் தீர்மானிக்கப்பட்டதுடன் அதற்கென ஒரு விசேட குழுவும் நியமிக்கப்பட்டது. அரசு திடீரென செய்தித் தணிக்கையை நீக்கியதற்கான காரணம் என்ன என்பது இதுவரை தெளிவாகத் தெரியவில்லை. இருப்பினும் ஓரளவு புரிந்து கொள்ள முடிகிறது. யுத்தம் தொடர்பான செய்தித் தணிக்கை என்ற சாதகமற்ற கிரிக்கெட் விளையாட்டையே அரசு விளையாடி வந்தது. இருப்பினும் முறை தவறாது — சரியான — இலக்கில் பந்து வீசப்படுமானால் விக்கெட்டின் மூன்று கம்புகளும் நிலத்தில் வீழ்வதற்கு நல்ல வாய்ப்புக்கள் இருந்தன.

கடந்த வாரம் நீக்கப்பட்ட யுத்தம் தொடர்பான செய்தித் தணிக்கை முதலில் 1998 ஜூன் மாதத்தில் நடைமுறைக்கு வந்தது.

2000 மே 3 ஆம் திகதி மீண்டும் யுத்தம் தொடர்பாக தணிக்கை அமுலுக்கு வந்தது. உண்மையில் 1998 இல் கொண்டுவரப்பட்ட செய்தித் தணிக்கையானது 2000 மே மாதம் வரை சட்ட வலுவைக் கொண்டதாகவே இருந்தது. ஆனால் செயல் வடிவிலோ அது உயிரிழந்த நிலையில் இருந்தது.

கடந்த வருடம் மே மாதத்தில் வன்னியில் யுத்த நிலைமை தீவிரமடைந்தது. இவ்வேளையிலேயே யுத்தம் தொடர்பான செய்தித் தணிக்கை இரண்டாவது முறையாக அமுல் செய்யப்பட்டது. இருப்பினும் அவ்வாறு நடைமுறைக்கு வந்த செய்தித் தணிக்கை விதிகளை மீறி 'சண்டேலீடர்' 'இரிதா பெரமுன' ஆகிய பத்திரிகைகள் தடைசெய்யப்பட்ட போதிலும் அந்தத் தடையானது பிறந்த வீட்டிலேயே மரணமடைந்தது. இந்தப் பத்திரிகைகள் மீது விதிக்கப்பட்ட தடையானது சட்ட விரோதமானது என நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அதைத் தொடர்ந்து செய்திப்பத்திரிகைகளின் ஆசிரியர்களின் குழு செய்தித் தணிக்கையை எதிர்த்து அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. அந்த மனுவில் பிரதிவாதிகளாக அரச செய்தித் தணிக்கையாளர்கள் இருவர் குறிப்பிடப்பட்டுள்ளனர். அந்த வழக்கில் இருந்து ஊடகத்துறை அமைச்சரும், சட்டமா அதிபரும் பின்வாங்கியதுடன் உடன்பாடு காணவும் விருப்பம் தெரிவித்தனர். இதன்படி ஜூலை 13 ஆம் திகதி அறிவிக்கப்பட்ட தணிக்கை தொடர்பான விதிகளுக்குதிருத்தங்கள் கொண்டுவர அரசு விருப்பம் தெரிவித்தது. தாங்கள் எதுவித தணிக்கையையும் ஏற்றுக்கொள்ளமாட்டோம் எனவும், செய்தித் தணிக்கை தொடர்பான வழிகாட்டி அனைத்துத் தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல எனவும் பத்திரிகை ஆசிரியர்களின் குழு தெரிவித்தது.

இரு வாரங்களுக்குள் பத்திரிகை ஆசிரியர் குழுவுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு உடன்பாடு காணப்படும் என பிரதிச் சட்டமா அதிபர் உயர்நீதி மன்றத்தில் வாக்களித்தார். இந்தப் பொறுப்பு அரச தணிக்கை அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டது. இருப்பினும் 2001 மே 30 ஆம் திகதிவரை சட்டமா அதிபர் திணைக்களமோ அல்லது அரச தணிக்கை அதிகாரியோ நீதிமன்றில்அளித்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை. இவ்வாறான சூழ்நிலையிலேயே யுத்தம் தொடர்பான செய்தித் தணிக்கையை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்ய பத்திரிகை ஆசிரியர்களின் குழு தயரானது.

மூன்று ஆண்டுகளாக அமுல் செய்யப்பட்டிருந்த யுத்தம் தொடர்பான செய்தித் தணிக்கை நீக்கப்பட்டுள்ளதால் அந்தத் தணிக்கை மூலம் எதிர்பார்த்த பயன் ஏதும் அரசுக்குக் கிடைத்தனவா என ஆராய்வது மிகவும் முக்கியமானது.

விடுதலைப் புலிகளுக்கு யுத்தம் தொடர்பான தகவல்கள் சென்றடைவதைத் தவிர்ப்பதற்காகவே இந்தத் தணிக்கை கொண்டு வரப்பட்டது என அரசு தெரிவித்தது. உள்நாட்டுச் செய்தி ஊடகங்களுக்கு மாத்திரமே இந்தச் செய்தித் தணிக்கை விதிக்கப்பட்டிருந்தது. ஆனால் வெளிநாட்டுச்செய்தியாளர்கள் செய்திகள் அனுப்புவதை இந்தத் தணிக்கை தடைசெய்யவில்லை. எனவேதான் விடுதலைப்புலிகளுக்கு உள்நாட்டுச் செய்தியூடகங்கள் மூலமே யுத்தம் தொடர்பான தகவல்கள் சென்றடைகின்றன என அரசு தெரிவித்தது.

### போர் முனையில் என்ன நடந்தது?

1998 ஆம் ஆண்டிலிருந்து போர் முனைகளில் என்ன நடந்தன என்பது குறித்துத் தற்போது நாம் ஆராய வேண்டும். 1998 இல் அரச படைகள் வசமிருந்த கிளிநொச்சியையும் அங்கிருந்த பிரதான படைமுகாமையும் விடுதலைப்புலிகள் கைப்பற்றினர். 1999 இல் விடுதலைப் புலிகள் 'ஜெயசிகுறு' இராணுவ நடவடிக்கையை வழிமறித்து சுமார் 20 ஆயிரம் படையினரை வவுனியா நோக்கித் துரத்தியடித்தனர்.

2000 ஆம் ஆண்டில் சுமார் 15 ஆயிரம் படையினரைக் கொண்டிருந்ததும் சுமார் 100 வருடங்களாக அரசின் கட்டுப்பாட்டில் இருந்ததுமான ஆனையிறவு முகாமை விடுதலைப்புலிகள் கைப்பற்றினர். இந்தமுக்கியமான தாக்குதலின்போது ஆயிரக்கணக்கான படையினர் கொல்லப்பட்டனர். அளவிட முடியாத அளவு படைக்கலங்களையும் வெடிப் பொருள்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றினர். 2001 இல் சுமார் 15 ஆயிரம் படையினருடன் முன்னேற முயன்ற

## தமிழில்: கஜனி

'அக்கினிச் சுவாலை' நடவடிக்கையில் படையினரை விடுதலைப் புலிகள் திருப்பி அனுப்பினர். யுத்தம் தொடர்பான செய்தித் தணிக்கை நடைமுறையிலிருந்த 3 ஆண்டுகளில் யுத்தத்தின் சுத்தப் பெறுபேறுகளை அவதானிக்கும்போது விடுதலைப் புலிகள் பெற்ற வெற்றிகளே எமக்குத் தெளிவாகத் தெரிகின்றன. இவை மிகவும் முக்கியமான உண்மை ஒன்றை எமக்கு அறிவிக்கின்றன. அதாவது யுத்தம் தொடர்பான செய்தித் தணிக்கை மூலம் பாதுகாக்கப்பட்டதாகக் கூறப்படும் யுத்தம் தொடர்பான இரகசியங்கள் உண்மையில் யுத்தத்துடன் தொடர்பு கொண்டிருக்கவில்லை என்பதேயாகும். வடக்கு — கிழக்கில் விடுதலைப் புலிகள் பல வெற்றிகளை யுத்தம் தொடர்பான தணிக்கை நடைமுறையில் இருந்தபோதே பெற்றனர். யுத்தம் தொடர்பான செய்தித் தணிக்கையானது அரசுக்கு எவ்விதத்திலும் யுத்தத்தில் லாபத்தைத் தேடித் தரவில்லை.

### அரசின் அச்சுறுத்தும் போக்கு

அரசு தனது அதிகார சுயரூபத்தைப் பாதுகாத்துக் கொள்ளுவதற்கே முக்கியமாக யுத்தம் தொடர்பான செய்தித் தணிக்கையை நடைமுறைப்படுத்தியது. ஒரு கொலைகாரன் கைகளிலும் தனது உடையிலும் தெரியும் விதத்தில் ஆயுதங்களை வைத்திருக்கும் செயலுக்கு ஒப்பானதாகவே அரசின் செய்தித் தணிக்கை விளங்கியது. அந்தக் கொலைகாரன் ஆயுதத்தைப் பயன்படுத்தினாலும் பயன்படுத்தாவிட்டாலும் இயல்பாகவே மற்றவர்களுக்குப் பயம் உருவாகும். அந்த விதத்திலேயே பத்திரிகையாளர்களைச் சுலபமாக அச்சுறுத்துவதற்கே அரசுசெய்தித்தணிக்கையைப் பயன்படுத்தியது. செய்தித் தணிக்கைக்கு எதிராகக் குரல் எழுப்பும் பத்திரிகையாளர்கள் ஒரு செம்மறி ஆட்டைப் பின்தொடரும் செம்மறி ஆட்டுக் கூட்டம்போல் பழக்கப்பட்டவர்கள்.

தற்போது யுத்தம் தொடர்பான தணிக்கையை நீக்குவதற்குப் பொருத்தமான அரசியல் சூழ்நிலைகள் எவையும் உருவாகவில்லை. தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகள் வெற்றியளிக்காவிடின் இரு தரப்பாரும் பெரும் எடுப்பில் மீண்டும் யுத்தத்தை ஆரம்பிக்கத் தயாராகி வருகின்றனர். விடுதலைப் புலிகளின் எச்சரிக்கை அவ்வளவு கடுமையாக உள்ளது. தங்கள் கோரிக்கை குறித்துத் தீவிரமாக ஆராயப்படாவிடின் மிகவும் கடுமையான விதத்தில் தாங்கள் பதிலளிக்கத் தயாராய் உள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

அரசும் விடுதலைப் புலிகள் அமைப்பின் மீதான தடையை நீக்காத நிலைப்பாட்டைக் கொண்டால் எஞ்சப்போவது யுத்தம் மாத்திரமே. அவ்வாறான சூழ்நிலையில் தமது தரப்பின் தோல்விகளை மூடிமறைப்பதற்கு இரு தரப்பாருக்கும் செய்தித் தணிக்கை மற்றும் செய்திகள் மீதான கட்டுப்பாடுகள் தேவைப்படும். அவ்வாறெனில் இத்தகைய சூழ்நிலையில் அரசு யுத்தம் தொடர்பான தணிக்கையைத்தற்போதுநீக்கியதுஏன்?

தற்போது உருவாகியுள்ள சட்டப் பிரச்சினைகளில் இருந்து தற்காலிகமாகத் தப்பி — மீண்டும் சக்தி மிக்க ஒரு செய்தித் தணிக்கையை நடைமுறைப்படுத்துவதற்காகவா? அல்லது தீவிரமற்ற — மிகவும் இரகசியமான விதத்தில் செய்தித் தணிக்கையைக் கொண்டு வருவதற்காகவா?

தற்போது பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து யுத்தம் தொடர்பான செய்திகளுக்கு சுயகட்டுப்பாட்டுடன் கூடிய தணிக்கையை இந்நாட்டுப் பத்திரிகையாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர். போர்க்களத்திலிருந்து செய்திகளை அனுப்பும் வாய்ப்பு வசதிகள் எம் நாட்டுச் செய்தியாளர்களுக்கு இல்லை. யுத்தம் தொடர்பான செய்திகள் குறித்து அரசு என்ன கருத்தைக் கொண்டுள்ளது என்பதைக் கடந்த வாரம் 'சிலுமின' பத்திரிகையில் வெளியான 'யுத்தக் கமிஷன் வியாபாரம்' என்ற செய்தி குறித்து வெளியிட்ட உணர்வலைகளில் இருந்து அறிந்து கொள்ள முடிகிறது. அந்த உணர்வலைகள் அடக்கிவாசிக்கப்பட்டாலும் தீவிரத் தணிக்கைக்கு அதுவழிகோலுவதாக அமையக் கூடும். அரசாங்கம் திறந்த மனதுடன் செயற்படத்தயாராகும்நிலையிலும் சுய செய்தித்தணிக்கைக்கு அப்பால் விரிவான விதத்தில் யுத்தம் தொடர்பான செய்திகளைப் பத்திரிகையாளர்கள் வெளியிடத் தயாராகும் நிலையிலுமே யுத்தம் தொடர்பான செய்தித்தணிக்கைக்கு முடிவுவரும்.

மேற்குறிப்பிட்ட இருதரப்பினரும் தயாராக இல்லாமல் இருப்பது வேதனைக்குரியது. செய்தித் தணிக்கை நீக்கப்பட்டது மகிழ்ச்சியை அளிக்கிறது. அதே நேரம் செய்திச் சுதந்திரத்திற்கு நிரந்தரமான பாதுகாப்பு அளிக்கப்படவேண்டியது அத்யாவசியமானது. ★


சாவகச்சேரி

கைத்தொழில் வணிகர் மன்றப் பொதுக்கூட்டம்

மன்றின் அங்கத்தவர்களுக்கான பொதுக்கூட்டம் எதிர்வரும் (10.06.2001) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு கரவெட்டியில் இயங்கும் மன்றக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

வணிகர்களின் இழப்பீடு, கடன்பெறுவது, வணிகம் திருத்துவது, வணிகர்களின் எதிர்கால நலன்கள் பற்றிய முக்கிய முடிவுகள் எடுக்கப்படவிருப்பதனால் சகல அங்கத்தவர்களும் தவறாது சமுகமளிக்கும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

(சி/17004] — செயலாளர்.



உ

சிவாச்சார்ய அபிஷேக அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் ஸ்வதி ஸ்ரீ விஷு வருஷம் வைகாசி மீ 24 ஆம் நாள் (7-6-2001) வியாழக்கிழமை காலை 9.48 மணி முதல் பகல் 10.37 மணி வரையுள்ள கடகலக்ன சுபவேளையில்

எமது சிரேஷ்ட குமாரன்

பிரம்மஸ்ரீ பாலகிருஷ்ண சர்மா

அவர்களுக்கு

தீட்சாகுரு: மாவை பிரம்மஸ்ரீ

சு. து. சுந்தரமூர்த்திக் குருக்கள்

அவர்களால் ஈச்சமோட்டை ஸ்ரீ ஞானவைரவர் சுவாமி சந்நிதானத்தில் வைத்து சிவாச்சார்யாபிஷேகம் நடைபெறத் திருவருள்பாலித்துள்ளது.

இந்தத் தெய்விக வைபவத்திற் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்;

சிவஸ்ரீ தி. பாலசுப்பிரமணியக் குருக்கள்

ஸ்ரீ ஞானவைரவர் கோயில்,
ஈச்சமோட்டை, சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். (88714)

'சமுத்திரம்' படப்பிடிப்புக்குச் சென்ற

# தமிழ்த் திரையுலகினருக்கு கர்நாடகாவில் அடி உதை!

சென்னை,ஜூன்6

கர்நாடக மாநிலத்தில் தமிழ்த் திரைப்படம் ஒன்றின் படப்பிடிப்புக்காகச் சென்ற நடிகர், நடிகைகள் உட்பட திரையுலகினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

இயக்குநர் கே.எஸ்.ரவிக்குமார் இயக்கும் 'சமுத்திரம்' படப்பிடிப்புக்காகச் சென்ற குழுவினரே கடந்த வாரம் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்தத் தாக்குதல் சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது, மைசூரிலிருந்து 35 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள மாண்டியா கொப்புறு 'என்ற கிராமத்தில், - காவிரி ஆற்றின் கரையில் - கடந்த 27 ஆம் திகதி மாலை 'சமுத்திரம்' திரைப்படத்தின் படப் பிடிப்பு நடைபெற்றுக் கொண்டிருந்தது.

அந்த சமயதத்தில் காங்கிரஸ் பிரமுகர் உட்பட 6 இளைஞர்கள் ஆற்றில், குளித்துக் கொண்டிருந்தனர்.

அவர்கள் மது போதையில் இருந்ததால், நடிகைகள் மற்றும் துணை நடிகைகளைப் பார்த்து ஏளனமாக கூச்சலிட்டதுடன், ஆபாசமான அசைவுகளுடன் ஆற்றில் நடனமாடினர்.

நடிகை ரோஜா, நடிகர்கள் முரளி, மணிவண்ணன் ஆகியோரின் மனைவியர் மற்றும் சரத்குமாரின் மகள்கள் உட்பட பல பெண்கள் அங்கிருந்ததால், இயக்குநர் கே.எஸ். ரவிக்குமார் குளித்துக் கொண்டிருந்தவர்களிடம் சென்று, அவர்களை வேறிடத்தில் குளிக்கும்படி கேட்டுக் கொண்டார். இதனையடுத்து, இருதரபுக்கும் மோதல் வெடித்தது.

உள்ளூர் இளைஞர்களுக்கு ஆதரவாக, அப்பகுதி மக்கள் திரண்டு, நடிகர்களின் கார்களை உடைத்து நொறுக்கியதுடன், படப்பிடிப்புக் குழுவினரையும் கடுமையாகத் தாக்கினர்.

இதில் கே.எஸ்.ரவிக்குமாருக்கு கையில் அரிவாள் வெட்டு விழுந்தது. படப்பிடிப்புக் குழுவினரிருக்கு காயங்கள் ஏற்பட்டன. (ஒ)



கர்நாடகாவில் தாக்குதலுக்குள்ளாகி சென்னை வந்து சேர்ந்த படப்பிடிப்புக் குழுவினரையும், இயக்குநர் கே.எஸ்.ரவிக்குமார் கையில் காயத்துடன் நடந்ததை விவரிப்பதையும் படங்களில் காணலாம்.

# முதல்வர் பதவியில் தொடர ஜெயலலிதாவுக்குத் தடையில்லை

## உச்ச நீதி மன்றம் தற்காலிக முடிவு

புதுடில்லி,ஜூன்6

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா முதலமைச்சராகப் பதவி வகிப்பதற்கு இடைக்காலத் தடை விதிக்க இந்திய உச்ச நீதி மன்றம் மறுத்து விட்டது.

ஊழல் வழக்கில் தண்டனை பெற்று தேர்தலில் போட்டியிடும் தகுதியை இழந்த ஜெயலலிதா முதலமைச்சராக நியமிக்கப்பட்டது தவறு என்று குறிப்பிட்டு, அவர் முதலமைச்சராக பதவி வகிக்க இடைக் காலத் தடை விதிக்கக் கோரும் வெவ்வேறு மனுக்கள் நேற்று ஒரே சமயத்தில் உச்சநீதி மன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.



ஜெயலலிதா முதல்வர் பதவி வகிக்க இடைக்காலத் தடை விதிக்கும் கோரிக்கையை அப்போது உச்ச நீதிமன்ற நீதியரசர்கள் நிராகரித்தனர்.

அதே சமயம், அந்த மனுக்களில கூறப்பட்டுள்ள மற்றைய விடயங்களின முக்கியத்துவம் கருதி, மூன்று நீதியரசர்கள் கொண்ட குழுவிடம் அவற்றை விசாரணைக்கு அனுப்புவது என்றும் அவர்கள் முடிவு செய்த, னர்.

இந்த மனுக்கள் குறித்து முதல்வர் ஜெயலலிதாவுக்கும், தமிழக அரசுக்கும் நோட்டீஸ்கள் அனுப்பும்படியும் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ஒ-5)

## எல்.ஆர்.ஈஸ்வரியின் வீட்டை அபகரிக்க முயற்சி

சென்னை,ஜூன்6

தென்னிந்தியாவின் பிரபல சினிமா பின்னணிப் பாடகியான எல்.ஆர்.ஈஸ்வரியில் சென்னையில் உள்ள வீட்டை அபகரிப்பதற்கு அ.தி.மு.கவினர் முயற்சி செய்வதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

தனக்குச் சொந்தமான வீட்டின் போலிப் பத்திரங்களை வைத்துள்ள பெரும் புள்ளி ஒருவர் அ.தி.மு.க பிரமுகரின் உதவியுடன் அந்த வீட்டை அபகரிக்க முயற்சி செய்வதாக எல்.ஆர்.ஈஸ்வரி குற்றஞ்சாட்டி உள்ளார். (ம)

## அந்தனி குயின் காலமானார்

பொஸ்டன், ஜூன்6

புகழ் பெற்ற ஆங்கிலத்திரைப்பட நடிகர் அந்தனி குயின் தனது 86வது வயதில் பொஸ்டன் நகரில் கடந்த வாரம் காலமானார்.

'ஈகிள்ஸ் காஸ்லாண்டட்', 'ஒமர் முக்தார்' உட்பட புகழ் பெற்ற பல படங்களில் நடித்துள்ள அந்தனி குயின் சிறந்த நடிகருக்கான அகாடமி விருது பெற்றவராவார்.

தனது மூன்று மனைவிகள், இரு ஆசை நாயகிகள் ஆகியோர் மூலம் அவருக்கு 9 புதல்வர்களும், 4 புதல்விகளும் உள்ளனர். (ஒ)

# காப்பகத்தில் ஏற்பட்ட தீ விபத்து;

# சீனாவில் 13 குழந்தைகள் பலி!

## நுளம்புத்திரியால் நேர்ந்த அனர்த்தம்

பெய்ஜிங்,ஜூன்6

**நுளம்புத்திரியால் ஏற்பட்ட தீயில் 13குழந்தைகள் கருகிப் பலியான சோகச் சம்பவம் சீனாவில் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது. நான்காங் நகரில் உள்ள குழந்தைகள் காப்பகத்திலேயே இந்தக் கொடிய விபத்து நிகழ்ந்தது.**

நேற்று முன்தினம் நள்ளிரவு குழந்தைகளை உறங்க வைத்து, காப்பகப் பராமரிப்பாளர்கள் நுளம்புத் தொல்லையிலிருந்து குழந்தைகளைக் காப்பாற்ற சற்று அதிகமாகவே நுளம்புத்திரிகைளக் கொளுத்தி அறைக்குள் வைத்ததாகவும் -

நள்ளிரவைத் தாண்டிய பின்னர் அந்த அறைக்குள் திடீரென்று தீப் பற்றி எரிந்ததாகவும் - விடுதிக்காப்பாளர்கள் தெரிவித்தனர்.

தீயில் சிக்கி இறந்த 13 குழந்தைகளும் 4 வயதுக்குட்பட்டவர்கள் ஆவார்கள்.

நுளம்புத் திரிகளில் ஒன்று படுக்கை விரிப்பில் விழுந்ததாலேயே தீப்பற்றியிருப்பதாக பூர்வாங்க விசாரணகளில் இருந்து தெரியவந்துள்ளது.

தீப்பிடித்ததால் ஏற்பட்ட புகையில் மூச்சுத் திணறி பல குழந்தைகள் பாதிப்படைந்துள்ளதாகவும் கூறப்படுகிறது. (ஒ)

# தாமரைக்கனி கைது!

சென்னை,ஜூன்6

தமிழக சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் தாமரைக்கனி கைது செய்யப்பட்டார்.



அ.தி.மு.க.விலிருந்து நீக்கப்பட்ட இவர், நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் ஸ்ரீ வில்லிபுத்தூர் தொகுதியில் சுயேச்சையாகப் போட்டியிட்டார். தாமரைக்கனியை எதிர்த்து அ.தி.மு.க.வேட்பாளராகப் போட்டியிட்ட, அவரது மகன் இன்பத்தமிழன் வெற்றிபெற்றார்.

இன்பத் தமிழனுக்கு ஆதரவாக தேர்தல் பணிபுரிந்த அ.தி.மு.க.வினருக்கு கொலை மிரட்டல் விடுத்ததாக தாமரைக்கனி மீது பொலீஸார் வழக்குப் பதிவு செய்திருந்தனர்.

இந்த நிலையில் சென்னை சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் தங்கியிருந்த போது நேற்றுமுன்தினம் தாமரைக்கனியைப் பொலீஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட சமயம் தாமரைக்கனி தி.மு.கவின் கறுப்பு, சிவப்பு நிறங்கள் கொண்ட கரை வேட்டி கட்டியிருந்ததும் -

சில நாள்களுக்கு முன்னர் தி.மு.கவில் சேரபபோவதாக அறிவித்ததும் குறிப் பிடத்தக்கவை. (ஒ-4)

## ஐம்பது ஆண்டுகளின் பின்னர்

# விதியின் விசித்திர விளையாட்டால் மீண்டும் முடி சூடிய ஜியானேந்திரா

காத்மண்டு,ஜூன்6

நேபாளத்தின் புதிய மன்னராக முடிசூடிக்கொண்டுள்ள ஜியானேந்திரா 1951ஆம் ஆண்டில் சிறுவனாக இருந்தபோது சிறிதுகாலம் நேபாள மன்னராக இருந்துள்ளார்.

நேபாளத்தின் பெரும் பகுதியை முன்னர் ஆண்டுவந்த ராணா வம்சத்தவரை வென்று ஷா வம்சத்தவர் நேபாள ஆட்சியைக் கைப்பற்றினர்.

ஆனால் ஷா மன்னர்களின் ஆட்சியில் பிரதம அமைச்சர்களாகிய ராணாக்கள், காலப்போக்கில் ஷா மன்னர்களை கைப்பாவைகளாக்கிக் கொண்டு நாட்டு நிர்வாகத்தை தாமே நடத்திவந்தனர்.

இந்த நிலையில் 1951ஆம் ஆண்டு ஆட்சியிலிருந்து திரிபுவன் மன்னர் தனது இரு ராணிகள், இளவரசர்கள் மகேந்திரா, அவரது மகன்களான தற்போது மறைந்த மன்னரான பிரேந்திரா, திரேந்திரா மற்றும் மகள் இரட்ணா ஆகியோருடன் வேட்டையாடச்செல்வதுபோல் இந்தியாவுக்குத் தப்பிச்சென்றார்.

உலக அரங்கில்

ஆனால் சிறுவனாக இருந்த ஜியானேந்திரா எப்படியோ ராணாக்களிடம் சிக்கிவிட்டார். ராணாக்கள் சிறுவன் ஞானேந்திராவை மன்னராக அறிவித்துவிட்டு நிர்வாகத்தை தம் வசத்தில் வைத்திருந்தனர்.

பின்னர் பாட்டனார் திரிபுவன் இந்தியாவின் உதவியுடன் ராணாக்களுடன் பேச்சு நடத்தி அதிகாரம்பெற்ற மன்னராகத் திரும்பி நேபாளம் வந்து ஆட்சிப் பொறுப்பை ஏற்கும்வரை ஜியானேந்திரா மன்னராக இருந்தார்.

ஆக விதியின் விசித்திர விளையாட்டால், மூத்த சகோதரர் பிரேந்திரா, தந்தை மகேந்திரா ஆகியோருக்கு முன்னதாக நேபாள மன்னராக முடிசூடியவர் தற்போதைய மன்னர் ஜியானேந்திரா ஆவார். (ஒ)

## திரேந்திராவும் உயிரிழந்தார்

காத்மண்டு,ஜூன்6

நேபாளத்தின் மறைந்த மன்னர் பிரேந்திராவின் சகோதரரான திரேந்திராவும் நேற்று முன்தினம் இராணுவ மருத்துவமனையில் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை அரண்மனையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் சிக்கி உயிரிழந்த இறுதி அரச குடும்பத்தவர் இவராவார்.

இதேசமயம் நேபாளத்தின் மக்களின் கொந்தளிப்பைக் கட்டுப்படுத்த மீண்டும் ஊரடங்கு உத்தரவு அமுல் படுத்தப்பட்டுள்ளது. அரச குடும்பத்தவரைக் கொன்றதாகக் கூறப்படும் இளவரசர் திபேந்திராவின் இறுதிச் சடங்குகள் இரு நாள்களுக்கு முன்னர் ஊரடங்கு சமயத்தில் இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## அரச குடும்பக் கொலைகளை விசாரிக்கக் குழு நியமனம்

காத்மண்டு,ஜூன்6

நேபாள அரச குடும்பத்தவரின் கொலைகள் தொடர்பாக உயர்மட்ட விசாரணை நேற்றுத் தொடங்கியுள்ளது.

உச்ச நீதிமன்ற நீதியரசர் கேசவ் பிரசாத் உபாத்தியாய தலைமையிலான விசாரணைக் குழுவில் மக்களவை சபாநாயகர் தளராவ் ராம் பட், எதிர்க்கட்சித் தலைவர் மாதங்குமார் நேபாள் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

புதிய மன்னர் ஜியானேந்திராவின் உத்தரவின் பேரில் இந்தக் குழு விசாரணைகளை நடத்தி வருவதாகவும் -

அரச குடும்பப் படுகொலைகள் குறித்த தமது அறிக்கையை 3 நாள்களுக்குள் அதாவது நாளை விசாரணைக்குழு சமர்ப்பிக்கும் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (ஒ)

## பிலிப்பைன்ஸில் பணயக்கைதிகளுடன்

# இராணுவ முற்றுகையிலிருந்து முஸ்லிம் தீவிரவாதிகள் மாயம்!

மணிலா,ஜூன்6

பிலிப்பைன்ஸில் இராணுவத்தினா மேற்கொண்ட சுற்றி வளைப்பின் போது, பணயக் கைதிகளுடன் தீவிரவாதிகள் தப்பிச் சென்றனர்.

தென்பிலிப்பைன்ஸின் பஸிலான் தீவில் 3அமெரிக்கர்கள் உட்பட 16 பேரைக் கடந்த வாரம் இஸ்லாமியப் பிரிவினைவாத அமைப்பான 'அபுசாயப்' தீவிரவாதிகள் கடத்திச் சென்றிருந்தனர். அவர்களை மீட்க பிலிப்பைன்ஸ் படையினர் இராணுவ நடவடிக்கை மேற்கொண்டனர்.

இதனையடுத்து தீவிரவாதிகள் எமிடான் நகரில் உள்ள தேவாலயம் மற்றும் மருத்துவமனை ஆகியவற்றைக் கைப்பற்றினர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை, அந்த இடத்தையும் இராணுவத்தினர் சுற்றி வளைத்து முற்றுகையிட்டனர்.

அப்போது இருதரப்பினருக்குமிடையே மோதல் ஏற்பட்டது. மோதலைப் பயன்படுத்தி பணயக்கைதிகளில் 5 பேர் தப்பித்தனர்.

ஆனால் தப்பியவர்களுக்குப் பதிலாக, மருத்துவமனைத் தாதிகள் 5 பேரையும் பிடித்துக் கொண்டு தீவிரவாதிகள் தப்பியுள்ளனர்.

பலமான இராணுவ முற்றுகையிலிருந்து, பணயக்கைதிகளுடன் தீவிரவாதிகள் தப்பியது பெரும் மர்மமாக உள்ளதாக பிலிப்பைன்ஸ் ராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, தப்பிவந்த பணயக கைதிகளில் ஒருவர், செயதியாளர்களிடம் பேசுகையில், தீவிரவாதிகளின் பிடியில் சிக்கியுள்ளவர்களின் நிலை மிகவும் ஆபத்தானதாக இருப்பதாகவும்-

பேச்சுவார்த்தை மூலம் அவர்களை விடுவிக்க முயற்சிப்பதே புத்திசாலித்தனம் என்றும் - கூறியுள்ளார். (ஒ)

## பெருநாட்டின் புதிய அதிபர் டொலெடோ

லீமா,ஜூன்6

பெரு அதிபர் தேர்தலில் அலெ ஜொனட்ரோ டொலெடோ வெற்றி பெற்றுள்ளார்.

56 வயதான டொலெடோ மிகவும் வறிய குடும்பத்தைச் சேர்ந்தவர்.

முன்னாள் அதிபர் பியூஜிமோரியை எதிர்த்த டொலெடோ, பல கொலைப் பயமுறுத்தல்களுக்கு மத்தியில் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றுள்ளார். (ஒ)

# கைதடியில் மீளக் குடியமர்ந்தோருக்கான நிவாரணத்தை உடன் வழங்க கோரிக்கை

## அமைச்சர் டக்ளஸிடம் நேரில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்6

கைதடியில் மீளக் குடியமர்ந்துள்ள பொதுமக்களுக்கு வழங்குவதாக உறுதியளிக்கப்பட்ட நிவாரணங்களை உடன் வழங்க வேண்டும்.

- இவ்வாறு கைதடியில் மீளக் குடியமர்ந்த மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நேற்று முன்தினம் யாழ்.ஸ்ரான்லி வீதியில் உள்ள அமைச்சு அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்ட மக்களினால் தெரிவிக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் கைதடி, கொடிகாமம், வரணி ஆகிய பகுதிகளில் சிவில் நிர்வாக அலுவலக அதிகாரி மேஜர் யாப்பா, கைதடிப் பகுதி இராணுவ அதிகாரி கப்டன் அலக்ஸ்சான்டர் மற்றும் அரச திணைக்களங்களின் தலைவர்கள், கைதடி, தென்மராட்சிப் பகுதி பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கலந்துரையாடலின் போது பொதுமக்களினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளின் விவரம் வருமாறு:-

☆ கைதடியில் மீளக் குடியமர்ந்தவர்களுக்கு வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்ட விசேட நிவாரணக் கொடுப்பனவு (15 ஆயிரம் ரூபா) உடனடியாக வழங்கப்பட வேண்டும்.

☆ அதேபோன்று உலர் உணவு நிவாரணமும் எந்தவித வேறுபாடுமின்றி அ, இ, உ பங்கீட்டு அட்டைகளை வைத்திருக்கும் அனைவருக்கும் வழங்கப்பட வேண்டும்.

☆ கோப்பாய் - கைதடி வீதியில் உள்ள கிடங்குகள் அனைத்தும் நிரவப்பட்டு வீதி உடனடியாகப் புனரமைக்கப்பட வேண்டும்.

☆ கைதடியிலிருந்து நாவற்குழி ஊடாக (ஏ9 பாதை) யாழ்ப்பாணம் சென்று வருவதற்கு பொதுமக்களுக்கு அனுமதியளிக்கப்பட வேண்டும்.

☆ கைதடியில் மீளக் குடியமர்ந்தவர்கள் வெளிமாவட்டங்களுக்குச் செல்வதற்கான விண்ணப்பப் படிவங்களை கைதடியிலேயே பெறுவதற்கு ஏற்பாடு செய்துதர வேண்டும்.

☆ கைதடியிலிருந்து கிராம அலுவலரின் அனுமதியின்றி பெறுமதிமிக்க பொருள்களை வெளியே எடுத்துச் செல்வதை தடுத்து நிறுத்த வேண்டும்.

☆ கைதடி கமலநல கேந்திர நிலையத்தில் இயங்கும் பொலீஸ் நிலையம் வேறு இடத்துக்கு மாற்றப்பட்டு கமநல கேந்திர நிலையத்தை அங்கு இயங்கச் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

☆ கைதடியிலுள்ள சில வீட்டுக் கதவுகளை இரவு வேளையில் தட்டிய இராணுவத்தினர் வீட்டிலிருந்தவர்களை அச்சுறுத்தியுள்ளனர். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

☆ கைதடிப் பாடசாலைகளில் உள்ள ஆசிரியர் வெற்றிடங்கள் அனைத்தும் நிரப்பப்பட வேண்டும்.

☆ தென்மராட்சி பிரதேச செயலகத்தை வாரத்தில் ஒரு தடவையேனும் கைதடி, மீசாலை பகுதிகளில் இயங்கச் செய்ய வேண்டும்.

☆ மீசாலை கமநல கேந்திர நிலையத்தினை இயங்கச் செய்வதுடன் இராணுவத்தினரால் எடுத்துச் செல்லப்பட்ட இந்த நிலையத்தின் உழவு இயந்திரத்தை மீண்டும் ஒப்படைக்க வேண்டும்.

- இவ்வாறு பொதுமக்கள் தரப்பில் பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. (ம-5)


உ

ஆனைக்கோட்டை

**அருள்மிகு ஸ்ரீ மூத்தநயினார் கோயில் வருடாந்த உற்சவம் 2001**

வருடாந்த மகோற்சவம் நாளை (07-06-2001) வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினைந்து திருவிழாக்கள் நடைபெற்று திருக்கல்யாண உற்சவத்துடன் நிறைவுபெறும்.

07-06-2001 - வியாழன் - கொடியேற்றம்
19-06-2001 - செவ்வாய் - சப்பறத்திருவிழா
20-06-2001 - புதன் - தேர்த்திருவிழா
21-06-2001 - வியாழன் - தீர்த்தத்திருவிழா
22-06-2001 - வெள்ளி - திருக்கல்யாண உற்சவம்

அடியார்கள் அனைவரும் வந்து திருவருள் பெறுமாறு அழைக்கின்றோம்.

(88456) - தர்மகர்த்தாக்கள்.



**91ஆம் நாள் நினைவஞ்சலி**



**கோபாலபிள்ளை தினகரதாஸ்**

(யா/கட்டைவேலி யார்க்கரு விநாயகர் வித்தியாலய மாணவத் தலைவன்)

தோற்றம் 1984 - 05 - 08 மறைவு 2001 - 03 - 08

திங்கள் மூன்று சென்றதுவோ
தம்பி உந்தன் திருவதனம் நாம் கண்டு!
திறமை பல கொண்ட தினகரனே
கல்வியிலே ஊக்கம் க்லைகளிலே ஆர்வம்
இன்னிசையில் நாட்டம் இளமைக்கேற்ற துடிப்பு!
அனைத்தையும் மறந்து அழித்தாயோ - நின்னுயிரை?
இன்னிசையில் இணைந்திருந்த இன்பமிகு யாழோசை
சுரம்பிசகி அபஸ்வரமாய் ஆனதுவோ?
தாங்கொணா ஏமாற்றம் தலைவிதியை மாற்றியதோ?
உன் பிரிவால் நாமெல்லாம் தினமும் தவிக்கின்றோம்
நின் ஆத்மா சாந்தி பெற கண்ணீர்ப் பூக்களைக்
காணிக்கையாக்குகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கிளான்,
துன்னாலை தெற்கு,
கரவெட்டி.

(88707)

உங்கள் பிரிவால் துயருறும்:
தா.கோபாலபிள்ளை
குடும்பத்தினர்


## முன்பள்ளி ஆசிரியருக்கு

யாழ்ப்பாணம் ஜூன்6

யாழ்.மாவட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் இன்று புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை அவரது அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

யாழ்.மாவட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் அனைவரையும் இதில் கலந்து கொள்ளுமாறு யாழ்.மாவட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் சம்மேளனம் அறிவித்துள்ளது. (ஐ)

## தலைமைத்துவப் பயிற்சி நெறி

சண்டிலிப்பாய்,ஜூன்6

வடக்கு-கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பணிமனையினால் நடத்தப்படும் இவ்வருடத்திற்கான கிராமிய மட்ட தலைமைத்துவ பயிற்சிநெறி இம்மாத இறுதியில் நடைபெறவுள்ளது.

நான்கு தினங்கள் நடைபெறவுள்ள இப்பயிற்சி நெறியில் இப்பிரிவிலுள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியனவற்றிலிருந்து தலா ஒரு உறுப்பினர் வீதம் பங்குபற்றுவார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. இதற்கான ஏற்பாடுகளை சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா.வேதநாயகன் மேற்கொண்டு வருகின்றார். (ம-135)

### நிமலராஜனின் பெயரில் நிதி சேகரிப்பு

# தனக்கு எவ்வித தொடர்புமில்லை என்கிறது பத்திரிகையாளர் சங்கம்

வடமராட்சி,ஜூன்6

பத்திரிகையாளர் நிமலராஜனின் பெயரில் நிதி சேகரிப்பு முயற்சியில் ஈடுபடுவோருக்கும் எமது சங்கத்துக்கும் எதுவித தொடர்புகளும் கிடையாது - என்று வட இலங்கை பத்திரிகையாளர் சங்கம் விடுத்துள்ள அறிககையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமரர் நிமலராஜனின் பெயரில் பல்வேறு இடங்களிலும் நிதி சேகரிக்கப்படுவதுடன் அவர் நினைவாக நடத்தப்படவுள்ள நிகழ்வுகளுக்கு அனுசரணையும் கோரப்படுவது பற்றி கடந்த ஞாயிறு அன்று நடைபெற்ற வடஇலங்கை பத்திரிகையாளர் சங்க கூட்டத்தில் பல உறுப்பினர்களாலும் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இதனையடுத்து சங்கம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சங்கத்தின் முன்னாள் செயலாளரான அமரர் நிமலராஜனின் பெயரில் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் எமது சங்கம் நிதி சேகரிப்பதிலோ நிகழ்வுகளுக்கான அனுசரணைகளைக் கோருவதிலோ ஈடுபடவில்லை. எதிர்காலத்திலும் இது போன்ற செயல்களில் ஈடுபடப்போவதில்லை.

- இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-173)


நன்றி தெரிவிப்பதுடன்

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலய குருமனையைப் புதிதாக நிர்மாணிக்க வேண்டிய நிதியான பத்துலட்சம் ரூபாவை ஒதுக்கித்தந்தமைக்கு வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு-கிழக்கு தமிழ் விவகார அமைச்சர்

**மாண்புமிகு கே.என். டக்ளஸ் தேவானந்தா**

அவர்களுக்கும், இதனைப் பெற்றுத்தர ஆவன செய்தமைக்காக முன்னாள் பிரதேச செயலர்

**அமரர் ஆ.மகாலிங்கம்**

அவர்களுக்கும் நன்றி தெரிவிப்பதுடன் வலி. தெற்கு பிரதேச சபைத் தலைவராகப் பதவியேற்றுள்ள

**கமலசேகரன்**



அவர்களையும் அவர்தம் சேவை தொடர, வாழ்வாங்கு வாழ நாம் மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

புனித அந்தோனியார் ஆலய
பங்குத் தந்தையும், பங்கு மக்களும்,
பங்கு சபையும்.

சுன்னாகம். (88708)



ஸ்கந்தவரோதயக் கல்லூரி

*கலை, வர்த்தக மாணவர் மன்றம்*

**வணிக நாதம் ~ 6 மலர் வெளியீடு**

காலம்:- இன்று(06-06-2001) புதன்கிழமை பி.ப.1.30 மணி
இடம்:- ஸ்தாபகர் கந்தையர் உபாத்தியார் மண்டபம்
தலைவர்:- செல்வன் ஜே.ஞானாகரன்
ஆசியுரை:- திரு.க.சிவாஜ் (அதிபர்)
திரு.அ.தற்பரானந்தன் (உதவிக்கல்விப்பணிப்பாளர்)
வாழ்த்துரை:- திரு.ஆறு.திருமுருகன் (ஆசிரியர்)
பிரதம விருந்தினர்:-
கலாநிதி.சபா.ஜெயராசா தம்பதிகள்
(தலைவர், நுண்கலைத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
சிறப்பு விருந்தினர்:- திரு.சிறீ.இராமநாதன்
(முகாமையாளர், உப்புக்கூட்டுத்தாபனம்)
கௌரவ விருந்தினர்:- திரு.சு.சுந்தரசிவம்
(உதவிக்கல்விப் பணிப்பாளர்)
வெளியீட்டுரை:- திரு.வி.அருளானந்தம்
(முகாமையாளர், தேசிய சேமிப்புவங்கி, சுன்னாகம்)
மதிப்பீட்டுரை:- திரு.சி.விஜயகுமார்
(விரிவுரையாளர், முகாமைத்துவ பீடம், யாழ்.பல்கலைக்கழகம்)
முதற்பிரதி பெறுபவர்:- திரு.சி.பொ.சிவஞானம் (சட்டத்தரணி)

கந்தரோடை,
சுன்னாகம். (88709)

கலை, வர்த்தக மாணவர்மன்றம்
ஸ்கந்தவரோதயக் கல்லூரி



உ

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம!

**திருமண வாழ்த்து**

இன்று (06-06-2001) புதன்கிழமை முற்பகல் 7.40 மணிமுதல் 11.00 மணி வரையான சுபவேளையில் சுவிஸில் நடைபெறும் திருமண வைபவத்தில் இணையும்

மணமகன்
திருநிறை செல்வன்
**நாகபாலா**



மணமகள்
திருநிறை செல்வி
**சரோஜினி**

ஆகிய புதுமணத் தம்பதிகள் இருவரையும் வண்ணை ஸ்ரீ காமாக்ஷி அம்மன் அருள் பெற்று நீடூழி காலம் பெருவாழ்வு வாழ வாழ்த்துகிறோம்.

திரு.த.கதிரவேலு (தம்பு)
இல.29, காரைக்காட்டு வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(88771)

திரு.S.சண்முகம்
அரசடி அம்மன் கோயிலடி,
பாண்டிருப்பு - 02,
கல்முனை.

# வெளி மாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதிபெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம்,ஜூன்6

யாழ்.மாவட்டத்தில் இருந்து வெளி இடங்களுக்குச் செல்வதற்கான பயண அனுமதிக்கு விண்ணப்பித்தவர்களில் இம் மாதம் 2ஆம் திகதி வரையும் அனுமதி வழங்கப்பட்டோரின் இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:

**சாவகச்சேரி**

(176084ஏ) (176084பி) (183710ஏ)
(185773ஏ)

**கரவெட்டி**

(151703ஏ) (151703பி) (160230ஏ)
(160230பி) (164463ஏ) (168092ஏ)
(168092பி) (169553ஏ) (169742ஏ)
(174345ஏ) (174345பி) (174345சி)
(174345டி) (174359ஏ) (181124ஏ)
(181124பி) (181182ஏ) (181182பி)
(181194ஏ) (185332ஏ) (185332பி)
(185368ஏ) (185368பி) (185483ஏ)
(185541ஏ) (185561ஏ) (185619ஏ)
(185619பி) (185619சி) (185619டி)
(185619எவ்) (185635ஏ) (185681ஏ)
(185681பி) (185687ஏ) (185697ஏ)
(185697பி) (185697சி) (185697டி)
(185728ஏ) (185728பி) (185728சி)
(185781ஏ) (185782ஏ) (185782பி)
(185791ஏ) (188113ஏ) (188125ஏ)
(188125பி) (188125சி) (188125டி)
(188125ஈ) (188125எவ்) (188148ஏ)
(188152ஏ) (188160ஏ) (188165ஏ)
(188165பி) (188178ஏ) (188181ஏ)
(188192ஏ) (188192பி) (188199ஏ)
(188212ஏ) (188212பி) (188213ஏ)
(188229ஏ) (188231ஏ) (188231பி)
(188249ஏ) (188249பி) (188254ஏ)
(188261ஏ) (188275ஏ) (188275பி)
(188275சி) (188278ஏ) (188302ஏ)
(188302பி) (188302சி) (188305ஏ)
(188306ஏ) (188306பி) (188306சி)
(188306டி) (188307ஏ) (188308ஏ)
(188308பி) (188308சி) (188316ஏ)
(188316சி) (188316டி) (188316ஈ)
(188316எவ்) (188319ஏ) (188326ஏ)
(188327ஏ) (188338ஏ) (188340ஏ)
(188340பி) (188354ஏ) (188354பி)
(188354சி) (188354டி) (188355ஏ)
(188355பி) (188357ஏ) (188359ஏ)
(188387ஏ) (188387பி) (188430ஏ)
(188510ஏ)

**மருதன்கேணி**

(188163ஏ) (188164ஏ) (188164பி)

**பருத்தித்துறை**

(153838ஏ) (153838பி) (158460ஏ)
(158460பி) (158460சி) (158460டி)
(158460ஈ) (158576ஏ) (177742ஏ)
(181105ஏ) (181105பி) (181196ஏ)
(183870ஏ) (183870பி) (183870சி)
(183985ஏ) (183985பி) (183985சி)
(183985டி) (183985ஈ) (185424ஏ)
(185482ஏ) (185512ஏ) (185512பி)
(185557ஏ) (185557பி) (185698ஏ)
(185699ஏ) (185699பி) (185783ஏ)
(185783பி) (185795ஏ) (185795பி)
(185825ஏ) (185825பி) (188120ஏ)
(188120பி) (188120சி) (188124ஏ)
(188124பி) (188135ஏ) (188136ஏ)
(188167ஏ) (188167பி) (188167சி)
(188197ஏ) (188197பி) (188204ஏ)
(188251ஏ) (188251பி) (188251சி)
(188251டி) (188270ஏ) (188288ஏ)
(188288பி) (188289ஏ) (188297ஏ)
(188320ஏ) (188320பி) (188325ஏ)
(188335ஏ) (188335பி) (188346ஏ)
(188361ஏ) (188386ஏ) (188400ஏ)
(188400பி) (188400சி) (188400டி)
(188400ஈ) (188400எவ்) (188400ஜி)
(188401ஏ) (188401பி) (188401சி)
(188409ஏ) (188410ஏ) (188410பி)
(188425ஏ) (188445ஏ) (188453ஏ)
(188453பி) (188453சி) (188453டி)

இம் மாதம் 4ஆம் திகதி வரையும் அனுமதி வழங்கப்பட்டோரின் இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:

**சாவகச்சேரி**

(177829ஏ) (183785ஏ) (183785பி)
(183825ஏ) (183825பி) (183973ஏ)
(185488ஏ) (188211ஏ) (188248ஏ)
(188248பி) (188248சி) (188248டி)
(188282ஏ) (188282பி) (188282சி)
(188437ஏ) (188555ஏ) (188558ஏ)
(189889ஏ) (189982ஏ) (189982பி)

**கரவெட்டி**

(167804ஏ) (167804பி) (172319ஏ)
(172319பி) (172319சி) (177898ஏ)
(181226ஏ) (181226பி) (182496ஏ)
(182497ஏ) (182534ஏ) (182534பி)
(183612ஏ) (183613ஏ) (183650ஏ)
(183650பி) (183797ஏ) (183797பி)
(183904ஏ) (183904பி) (184024ஏ)
(184024பி) (185375ஏ) (185375பி)
(185375சி) (185375டி) (185375ஈ)
(185377ஏ) (185433ஏ) (185435ஏ)
(185444ஏ) (185453ஏ) (185453பி)
(185535ஏ) (185542ஏ) (185542பி)
(185588ஏ) (185624ஏ) (185627ஏ)
(185716ஏ) (185734ஏ) (185734பி)
(185756ஏ) (188147ஏ) (188183ஏ)
(188207ஏ) (188207பி) (188209ஏ)
(188209பி) (188234ஏ) (188234பி)
(188234சி) (188243ஏ) (188262ஏ)
(188263ஏ) (188290ஏ) (188305ஏ)
(188305பி) (188323ஏ) (188343ஏ)
(188343பி) (188343சி) (188356ஏ)
(188379ஏ) (188379பி) (188395ஏ)
(188395பி) (188402ஏ) (188402பி)
(188434ஏ) (188434பி) (188457ஏ)
(188458ஏ) (188458பி) (188466ஏ)
(188481ஏ) (188481பி) (188484ஏ)
(188487ஏ) (188521ஏ) (188521பி)
(188521சி) (188523ஏ) (188523பி)
(188527ஏ) (188527பி) (188527சி)
(188527டி) (188550ஏ) (188554ஏ)
(188563ஏ) (188563பி) (188563சி)
(188587ஏ) (189845ஏ) (189849ஏ)
(189853ஏ) (189853பி) (189855ஏ)
(189855பி) (189856ஏ) (189856பி)
(189858ஏ) (189859ஏ) (189877ஏ)
(189881ஏ) (189881பி) (189882ஏ)
(189894ஏ) (189896ஏ) (189906ஏ)
(189920ஏ) (189927ஏ) (189960ஏ)
(189961ஏ) (189961பி) (189961சி)
(189989ஏ) (189989பி) (189989சி)
(190004ஏ) (190050ஏ) (190054ஏ)
(190054பி) (190083ஏ) (190083பி)
(190083சி) (190083டி) (190093ஏ)
(190099ஏ) (190209ஏ) (190227ஏ)
(190227பி) (190228ஏ) (190228பி)
(190252ஏ) (190252பி) (190252சி)
(192547ஏ) (192579ஏ) (192579பி)

**மருதங்கேணி**

(188496ஏ) (188496பி) (188496சி)
(188547ஏ) (188576ஏ) (188576பி)

**பருத்தித்துறை**

(158277ஏ) (172181ஏ) (173366ஏ)
(177613ஏ) (177613பி) (177630ஏ)
(177772ஏ) (181369ஏ) (181369சி)
(182284ஏ) (182284பி) (183604ஏ)
(183604பி) (183748ஏ) (183748பி)
(183796ஏ) (183796பி) (185437ஏ)
(185566ஏ) (185584ஏ) (185585ஏ)
(185650ஏ) (185738ஏ) (185804ஏ)
(185816ஏ) (185816பி) (185819ஏ)
(188114ஏ) (188159ஏ) (188159பி)
(188159சி) (188175ஏ) (188175பி)
(188175சி) (188226ஏ) (188269ஏ)
(188269பி) (188279ஏ) (188298ஏ)
(188329ஏ) (188345ஏ) (188351ஏ)
(188351பி) (188351சி) (188369பி)
(188394ஏ) (188422ஏ) (188422பி)
(188437பி) (188440ஏ) (188440பி)
(188440சி) (188446ஏ) (188448ஏ)
(188448பி) (188448சி) (188449ஏ)
(188449பி) (188469ஏ) (188477ஏ)
(188499ஏ) (188499பி) (188500ஏ)
(188502ஏ) (188502பி) (188502சி)
(188516ஏ) (188540ஏ) (188540பி)
(188540சி) (188549ஏ) (188556ஏ)
(188557ஏ) (188560ஏ) (188560பி)
(188560சி) (188566ஏ) (188570ஏ)
(188570பி) (188570சி) (188580ஏ)
(188585ஏ) (188586ஏ) (188589ஏ)
(188590ஏ) (188590பி) (188590சி)
(188686ஏ) (189815ஏ) (189830ஏ)
(189830பி) (189830சி) (189830டி)
(189834ஏ) (189834பி) (189839ஏ)
(189842ஏ) (189844ஏ) (189852ஏ)
(189852பி) (189862ஏ) (189862பி)
(189865ஏ) (189870ஏ) (189872ஏ)
(189887ஏ) (189890ஏ) (189899ஏ)
(189899பி) (189899சி) (189899டி)
(189920ஏ) (189933ஏ) (189963ஏ)
(189963பி) (189963சி) (189963டி)
(189963ஈ) (190013ஏ) (190013பி)
(190045ஏ) (190045பி) (190045சி)
(190045டி) (190046ஏ) (190057ஏ)
(190062ஏ) (190070ஏ) (190070பி)
(190070சி) (190086ஏ) (190100ஏ)
(190107ஏ) (190107பி) (190107சி)
(190135ஏ) (190135பி) (190135சி)
(190135டி) (190171ஏ) (190171பி)
(190239ஏ) (192542ஏ) (192542பி)
(192542சி) (192609ஏ) (192609பி)
(192639ஏ) (192639பி) (க-10)

## நடமாடும் செயலக சேவை

கோப்பாய்,ஜூன்6

கோப்பாய்ப் பிரதேச செயலகத்தின் நடமாடும் செயலக சேவை மாதத்தின் ஒவ்வொரு முதல் திங்கட்கிழமைகளிலும் அச்சுவேலிப் பிரதேச சபை உப அலுவலகத்தில் நடைபெற்றுவருகிறது.

இம்மாத நடமாடும் செயலக சேவை தவிர்க்கமுடியாத காரணத்தால் எதிர்வரும் 11ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-72)


# முதலாம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 24 - 05 - 1938



அரக்கர் கையில் 18 - 05 - 2000

## அமரர் தம்பு சுப்பிரமணியம்

(கைதடி மத்தி, குமரநகர்)

**அன்புடனே அனைவரையும் அரவணைத்த தெய்வமே!**
**ஆண்டொன்று மறைந்ததையா ஆறவில்லை**
**நம் துயரம், அடைந்திடுக சாந்தி என**
**வேண்டி நிதம் துதிக்கின்றோம்.**

அன்னாரது வீட்டில் இன்று (06.06.2001) புதன்கிழமை நடைபெறும் ஆண்டுத் திவச நிகழ்விலும், மதியபோசன வைபவத்திலும், எமது உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*தகவல்:*
சு.சிவலிங்கம்,
*கைதடி மத்தி,*
*குமரநகர்.* (88700)

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

# 33ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அன்னை மடியில் 18 - 10 - 1978



ஆண்டவன் அடியில் 05 - 05 - 2001

## மகாலிங்கம் விஜயகுமார் *(விச்சு)*

பண்பிற்கு நிலைக்களனாய்ப் பாரினிலே
உதித்திட்ட உத்தமனே!
பாசத்தைக் காட்டி எமையெல்லாம்
பரிதவிக்க வைத்து விட்டீர்!
உற்றாரை, உறவினரை, ஊராரைப்பேணி - எங்கள்
சொத்தாக இருந்தாய் இவ்வுலகில் - மேலுலக
வித்தாகப் போன பின்னும் எம் மனத்தில்
விருட்சமாக வாழ்வாய் வேரூன்றி விச்சு!

இன்று (06-06-2001) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி, ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வில் கலந்துகொள்வதுடன் மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*பட்டினசபை ஒழுங்கை,*
*மானிப்பாய்.* (88667) - குடும்பத்தினர்.

உ
சிவமயம்

# திருமணத் திருமுகம்

**அன்புடையீர்,**

நிகழும் சர்வ மங்களகரமான விஷூவருடம் வைகாசி மாதம் 24 ஆம் நாள் நாளை (07-06-2001)வியாழக்கிழமை மூல நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் முற்பகல் 10.00 மணி முதல் 12.00 மணிவரையிலுள்ள சுபமுகூர்த்த வேளையில்

**திரு.திருமதி இராமகிருஸ்ணன்**
**தம்பதிகளின் கனிஷ்ட புத்திரன்**
**திருநிறை செல்வன்**
**தீனதயாளன்** (தயா)
**அவர்களுக்கும்**



**திரு.திருமதி சச்சிதானந்தம்**
**தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரி**
**திருநிறை செல்வி**
**லோஜனா** (ஜனா)
**அவர்களுக்கும்**

தெய்வத்திருவருளை முன்னிட்டு மாங்கல்ய தாரணம் நடத்தும் பொருட்டு பெரியோர்களால் நிச்சயிக்கப் பெற்று மேற்படி வைபவம் Lioyd's Park Theatre, Winns Terrace(Near Forest Road) Walthamstow E17 இல் நடைபெறும் என்பதை மகிழ்ச்சியுடன் எமது உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

**திரு.திருமதி இராமகிருஸ்ணன்**
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

**(இருவீட்டார் அழைப்பு)**

**திரு.திருமதி சச்சிதானந்தம்**
*(இலங்கை மின்சாரசபை)*
நிரந்தர முகவரி :-துர்க்கை அம்மன் வீதி,
நுணாவில் மத்தி, சாவகச்சேரி.
தற்காலிக முகவரி:- கோகில வீதி,
கோண்டாவில் வடக்கு, கோண்டாவில். (88503)

# மனதார வாழ்த்துகின்றோம்

எமது முன்னாள் தபாலதிபர்



## திரு.ந.ஆனந்தராசா

அவர்கள் இன்று அகவை அறுபதை (60) கொண்டாடுவதையிட்டு மணிவிழாக்காலங்களில் இவரின் சமய, சமுதாயப் பணி மேலும் வளர மனதார வாழ்த்துகின்றோம்.

அஞ்சலகத்தினர்,
வட்டுக்கோட்டை.

(C/16993)

# யாழ்.மருத்துவபீடத்திலிருந்து 20 டாக்டர்கள் வெளியேற்றம்

யாழ்ப்பாணம்,ஜூன்5

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற இறுதியாண்டு மருத்துவமானி பரீட்சையில் சித்தி எய்திய 20 பேர் யாழ். மருத்துவ பீடத்தில் இருந்து மருத்துவர்களாக வெளியேறியுள்ளனர்.

இவர்களில் பன்னிரண்டு பேர் யாழ்.மருத்துவபீட உள்ளக மாணவர்கள், எட்டுப்பேர் தனியார் மருத்துவக்கல்லூரி மாணவர்களாவர்.

இவர்களுக்கான உள்ளகப் பயிற்சிகள் வெகுவிரைவில் ஆரம்பமாக உள்ளன.

சித்திபெற்ற மருத்துவபீட உள்ளக மாணவர்கள் விவரம் வருமாறு:-

ஜே.ஐங்கரன், எஸ்.பிரேம்நாத், எஸ்.ராஜசேகரன், எம்.வேதஉதயன், ஏ.றொகான், கே.அழகேந்திரன்.

எம்.பாஸ்கரன், எஸ்.குகதாசன், பி.முல்லை, என்.நிர்மலா, எஸ்.ஸ்ரீமதி, ஸி.செந்தில்குமரன்.

சித்திபெற்ற வடஇலங்கை மருத்துவக் கல்லூரி மாணவர்கள் விவரம் வருமாறு:-

ஏ.அசோக்குமார், ஆர்.மணிவாசகன், என்.மேனகா, வி.முரளி, என்.நித்தியா, கே.ராஜி, என்ரவீந்திரன், எஸ்சிறி பவானந்தராஜா.

மேற்படி பரீட்சை முடிவுகள் கடந்த மாதம் 28ஆம் திகதி உத்தியோக பூர்வமாக வெளியிடப்பட்டன. (க-7)

## சிரமதானம்

சங்கரத்தை திக்கிராய்க்குளமும் அதன் ஒருமைல் நீளமான வாய்க்காலும் சிரமதானத்தின் மூலம் ஆழமாக்கித் துப்புரவு செய்யப்பட்டுள்ளன.

வட்டு.மத்திய கல்லூரி சாரணர்கள 40 பேர் இந்தச் சிரமதானப் பணியை கடந்த சனி, ஞாயிறு ஆகிய இரண்டு தினங்களும் மேற்கொண்டனர். (ம-175)

## திருஞானசம்பந்தர் குருபூசை தினம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் ஏற்பாட்டில் திருஞானசம்பந்தர் குருபூசை நாளை வியாழக்கிழமை காலை 9 மணியளவில் நீராவியடியிலுள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற உள்ளது. (ம)

---

# நான்காம் ஆண்டு நினைவினிலே.....

பிறப்பு 15 - 04 - 1970



இறப்பு 23 - 05 - 1997

## அமரர் கனக சத்தியநேசன்

*(மாவட்ட வைத்தியசாலை, வல்வெட்டித்துறை)*

திதி:- அபரபக்கம் பிரதமை (06-06-2001)

ஏதுமறியா வயதினிலே எனைப் பிரிந்தீரே! - அப்பா
ஏதுகுறை எனக்கில்லை. எத்தனை உறவிருந்தும்,
நாதமுடன் நானழைக்க நானிலத்தில் நீங்களில்லை - அப்பா!
தீதறியா எந்தனுக்குத் தந்தையில்லாக் குறையேதான்!

அன்பு மகள்:- விதுர்ஷா,
மனைவி.

*"கலாஞ்சலி"*
*அல்வாய்.*

(88083)

---

# நெஞ்சை விட்டகலாத பன்னிரண்டாம் ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில் 13 - 07 - 1920



தந்தையின் அழைப்பில் 06 - 06 - 1989

## சூ.வஸ்தியாம்பிள்ளை அல்வின்

*(ஓய்வு பெற்ற சாரதி இ.போ.ச.)*

**மண்ணில் என்னை நேசித்தவரே!**
**மரணத்திலும் என்னை மறவாதீர்கள்!**

உம் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

*சாட்டி,*
*வேலணை கிழக்கு,*
*வேலணை.*

(88674)

---

# நெஞ்சை விட்டு நீங்கா முதலாம் ஆண்டு நினைவலைகள்



**திருமதி கந்தசாமி பூமணிதேவி**

தோற்றம்:- 1943-07-06



**செல்வி பிரபாஜினி கந்தசாமி**

தோற்றம்:- 1981-09-27



**வேலுப்பிள்ளை சுரேந்திரன்**

தோற்றம்:- 1943

மறைவு:- 2000-5-20

நல்லவர்கள் நீண்ட நாள்கள் வாழ்வதில்லை
மாண்டவர்கள் சிலரை மறப்பதற்கு முடிவதில்லை
இளமையில் இறப்பவர்களை இறைவன் நேசிக்கின்றான்

நாளை (07-06-2001) வியாழக்கிழமை எமது தற்காலிக வதிவிடமான மானிப்பாயில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் வந்து கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- பாசமிகு குடும்பத்தினர்.

*தற்காலிக முகவரி:-*
*"ரட்ணவில்லா"*
*ஆஸ்பத்திரி லேன், மானிப்பாய்.*

*நிரந்தர முகவரி:-*
*'மருதங்குளம்,*
*மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.*

(88673)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு 06 - 12 - 1923



உதிர்வு 08 - 05 - 2001

## திருமதி இராஜேஸ்வரி கணபதிப்பிள்ளை

08-05-2001 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவியின், இறுதிக்கிரியைகளில் பங்குகொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்களுக்கும், எமக்குப் பல்வேறு வழிகளிலும் பலவித உதவிகள் புரிந்தவர்களுக்கும், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், அன்னார் சுகயீன முற்று யாழ்.திருச்சிலுவை சுகநல நிலையத்தின் **(Holy Cross Health Centre)** அனுமதிக்கப்பட்டிருந்த வேளையில் அன்புடனும், பரிவுடனும் பராமரித்துச் சிகிச்சை அளித்த அருட் சகோதரிகளுக்கும், தாதிமார்களுக்கும், ஏனைய ஊழியர்களுக்கும் எமது மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம.

அத்துடன் நாளை (07-06-2001) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறுகின்ற சபிண்டீகரண நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைத்து அன்பு உள்ளங்களையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

தகவல்:
- குடும்பத்தினர்

*42/2, அம்மன் வீதி,*
*கந்தர்மடம்,*
*யாழ்ப்பாணம்.*

(88130)

---

# பாசமிகு அண்ணாவுடன் ஆசைத்தங்கையரும்

## பன்னிரண்டாவது ஆண்டு நினைவலைகள்

மலர்வு 01 - 09 - 1971



உதிர்வு 05 - 04 - 1989

### அமரர் மகாராஜா அனுராஜ்

## முதலாவது ஆண்டு நினைவலைகள்

மலர்வு 23 - 07 - 1976



உதிர்வு 19 - 05 - 2000

### திருமதி அஜந்தன் அனுராதை

**திதி: பிரதமை 06.06.2001**

**பாசத்தின் உறைவிடமாய் பண்பின் நிலைக்களனாய் விளங்கிய**
**எங்கள் குடும்பத்தின் அணையாத தீபங்களே!**
**காலங்கள் நகர்ந்தாலும் எங்கள் இதயம் இருக்கும் வரை**
**உங்கள் பிரிவு ஆறாது!**

உங்கள் பிரிவால் துயருறும்:

அப்பா, அம்மா குடும்பத்தினர்.

கணவன் பா.அஜந்தன்
பிள்ளைகள் அஜனி, அனோஜன்.

தகவல்: திரு.திருமதி வை.மகாராஜா ஆயிலியம்,
கற்பகப் பிள்ளையார் கோயிலடி,
உடுவில் கிழக்கு.

(88685)

## கமமும் புலமும்


தயாரிப்பு: ஜெயஸ்ரீ

# தென்னையை அழிக்கும் ஈக்கில் "எரிவந்தம்"

### தென்னையில் ஈக்கில் எரிவந்தம் (EKLE BLAST IN COCONUT LEAVES)

மிலேனியத்தில் தென்னைக்குச் சோதனையான காலம். இதுவரை இல்லை என்று கருதப்பட்ட 'மைற்' மற்றும் ஈக்கில் எரிவந்தம் நோய்களின் தாக்கங்களுக்கு தென்னை முகம் கொடுக்க வேண்டியுள்ளது. இது காலத்தின் கோலமாகும்.

மனிதர்களுக்கு மட்டுமல்ல தாவரங்களுக்கும் விலங்குகளுக்கும் கூட நோய், பூச்சி, பீடைகளின் தாக்கம் எப்பொழுதும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. சாதகமான சூழல் இருக்கும் போது குறிப்பிட்ட நோய்கள் பல்கிப் பெருகுகின்றன. இதனைக் கருத்திற் கொண்டு தென்னையில் இருந்து பயனைப் பெறுகின்ற நாம் தென்னைக்கு ஏற்படுகின்ற தாக்கங்களை இனங்கண்டு பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் அவற்றைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும்.



கருவண்டுத் தாக்கத்துக்கு உள்ளான குருத்தோலையைப் படத்தில் காணலாம்.

## தடுக்கவில்லை எனில் பாதிப்புக்கள் அதிகம்

கடந்த இரண்டு வருடங்களாகவே ஈக்கில் எரிவந்தம் நோயானது இங்கு பல்கிப் பெருகி வருவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இதற்குக் காரணம் ஒரு பங்கசு ஆகும். இந்தப் பங்கசு ஆனது தென்னையின் எல்லாப் பருவ வயதை உடைய ஓலைகளையும் தாக்கி அவற்றில் சேதத்தை உண்டு பண்ணுகிறது.

ஆரம்பத்தில் இவ்வாறு சேதமடைந்த ஓலையைப் பார்த்தவர்கள், கருவண்டின் தாக்கத்தாலேயே ஓலைகள் இப்படிச் சேதமடைகின்றன என எண்ணிக்கொண்டனர். ஆனால் வண்டு தாக்கியிருந்தால் அது கடித்து உண்ட இலையின் பாகங்களில் இருந்து வெளியேறிய சக்கை போன்ற பொருள் வட்டுப் பகுதியில் இருக்க வேண்டும். அத்துடன் குருத்து விரிகின்ற போது ஒரே வரிசையில் ஓலைகளில் துவாரங்கள் காணப்பட வேண்டும். சில சமயங்களில் குருத்து மட்டை தாக்கப்பட்டிருந்தால் குருத்து முறிந்து காணபபடும்.

ஆனால் பங்கசுவின் தாக்கமானது ஓலையின் இதழ் நுனியில் இருந்து அரை அடி தூரத்தில் ஈக்கின் பாகத்தில் முதலில் ஒரு மஞ்சள் நிறப் புள்ளியாகக் காணப்படும். இதன் தாககம் அதிகரித்தும் தாக்கப்பட்ட இடமானது சாம்பல் நிறம் கலந்த கருங்கபில நிறமாக நுனியை நோக்கியும் அடியை நோக்கியும் கருகிக் கொண்டு செல்லும். அதனால் ஈக்கில் பகுதியுடன் இணைந்த ஓலையின் இதழ்ப் பகுதி ஈக்கிலில் இருந்து விடுபட்டு துவாரத்துடன் காணப்படும். இதனால் பலத்தை இழந்த இதழ் காற்றில் அடிபடும் போது கிழிந்து நிலத்தில் விழுகிறது.

**க.தனிநாயகம் (Dip. in Agri.)**
*தோட்ட முகாமைத்துவப் பகுதி - பளை)*

ஆரம்பத்தில் ஓலை மட்டையின் ஒரு பக்கத்தில் காணப்படும் இந்த நோயின் தாக்கம் அதற்கு எதிரான அடுத்த பகுதிக்குப் பரவுகின்றது. தாக்கத்தின் முடிவில் 'ஏ' வடிவத் தோற்றத்தில் ஓலையில் சேதம் காணப்படும்.

இத்தாக்கம் ஓலையின் நுனி மற்றும் இடைப் பகுதிகளில் ஏற்பட்டிருப்பதை தற்போது நாம் சர்வ சாதாரணமாகக் காணக்கூடியதாகவுள்ளது. எனவே இனிமேலும் இப்படியான தாக்கத்தைக் கண்டு வண்டுத்தாக்கம் என்று எவரும் கருதக் கூடாது.

நெற்பயிரில் எப்படி கழுத்து எரிவந்தம் வந்து கதிரானது தண்டில் இருந்து பிரிக்கூப்படுகின்றதோ அது போலவே ஈக்கில் எரிவந்தம் மூலம் ஓலையின் இதழானது ஈக்கிலில் இருந்து பிரிக்கப்படுகின்றது. இதன் காரணமாகப் பல பின் விளைவுகள் ஏற்படுகின்றன.

- தரமான கிடுகு பெறமுடியாது
- ஈக்கில் பெறமுடியாது
- தேங்காய்களின் உற்த்தி குறைவடையும்.
- மரம் பார்ப்பதற்கு அலங்கோலமாக இருக்கும்.
- சிறு கைத்தொழில் முயற்சிகள் முடங்கிப்போகும்.

### நோயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள்

*பங்கசு நாசினி பாவித்தல்:-* தென்னை மரங்கள் வெவ்வேறு உயரங்களில் இருப்பதால் நாசினி விசுறுவதற்குப் பல்வேறு சிரமங்கள் ஏற்படும். விசை தெளிகருவி பாவிப்பதாயின் நகரப் பகுதியை அண்டிய பிரதேசங்களில் சுற்றாடல் மாசுபடும். கிராமப் புறங்களுக்கு இம் முறை பொருத்தமானதாக இருக்கும் நகரப் பகுதிகளில் உள்ளவர்கள் தாவரத்தினால் உறிஞ்சிக் கடத்தும் தன்மை கொண்ட பங்கசு நாசினிகளைப் பாவிப்பது பொருத் தமானதாக இருக்கும் (SYSTEMIC FUNGICIDE)

*பாவிக்கும் முறை:-*

தென்னை மரத்துக்கு நீர் பாய்ச்சப்பட்டிருப்பின் அல்லது நீரைப் பாய்ச்சி ஈரலிப்பாக்கிய பின்பு தென்னைமரத்தில் இருந்து 3 தொடக்கம் 6 அடி விட்டத்துக்குள் உள்ள வேர்களை அலவாங்கினால்க் கிளப்பி எடுக்க வேண்டும். அதன் பின்பு இரண்டு 'சொப்பிங்' பைகள் எடுத்து ஒன்றினுள் ஒன்றை வைத்து ஒரு லீற்றர் நீருடன் குறிப்பிட்ட நாசினியைக் கரைத்துப் பையினுள் ஊற்ற வேண்டும். பின்பு தென்னையில் காணப்படும் வேர்களில் சிலவற்றை நாசினி இருக்கும் பையினுள் செலுத்தி பையின் வாயை மூடிக்கட்ட வேண்டும் இறுதியாக வேர் காணப்பட்ட பகுதியில் குழி ஒன்றை வெட்டி நாசினி இருக்கும் பையை அதனுள் வைத்து மண்ணால் மூடிவிட வேண்டும். (அவ்விடத்தை அடையாளமிடல் வேண்டும்)

தற்பொழுது நல்ல வெய்யிற் காலமாக இருப்பதால் மரத்தில் கடத்தல் செயற்பாடு விரைவாக நடைபெறும். அப்பொழுது மருந்தானது மரத்தின் எல்லைப் பகுதிகளுக்கும் கடத்தப்படும். இதனால் நோய்க்காரணியான பங்கசுவின் பெருக்கம் கட்டுப்படுத்தப்படும்.

### கட்டுப்படுத்தும் நாசினி வகைகள்

- பிளாஸ்ற் ஓல் 50 (BLAST ALL 50) - இந்த நாசினியில் ஒரு அவுன்சை 9 லீற்றர் நீரில் கலந்து தெளிகருவியால் விசிறுதல் வேண்டும்.
- பேகோர் - இரண்டு தேக்கரண்டி எடுத்து 10 மில்லி லீற்றர் நீருடன் கலந்து மரத்தில் 5 அங்குல ஆழத்தில் துளையிட்ட பின்பு ஓலை மடலைப் பாவித்து அதற்குள் மருந்தைச் செலுத்தலாம்.
- பினான்றவக்ஸ் - இரண்டு தேக்கரண்டி மருந்தை எடுத்து 5 அங்குல ஆழத்தில் மரத்தில் சாய்வாகத் துளையிட்ட பின்பு அதனுள் மருந்தைச் செலுத்தி துவாரத்தை மூடிவிட வேண்டும்.
- ஹினோசான் - ஒரு அவுன்ஸ மருந்தை எடுத்து 9 லீற்றர் நீரில் கலந்து தெளிகருவியினால் ஓலைகள் நன்கு நனையத்தக்கவாறு விசுறுதல் வேண்டும்.

இவ்வாறான நாசினிகளைப் பாவிக்கும் போது 'மைற்' சிற்றுண்ணியைக் கூடக் கட்டுப்படுத்தக் கூடியதாக இருக்கும்.

### சமூகத்தின் கடப்பாடு

சமூக சேவைகளை மேற்கொள்ளும்பல அமைப்புகள் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் இருக்கின்றன. இந்த அமைப்புகள் துறை சார்ந்த அதிகாரிகளை அழைத்து நோய் பீடைத்தாக்கம் தொடர்பான கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதோடு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற கொள்வதற்கு பூரண ஒத்துழைப்பையும் வழங்க வேண்டியது அவசியம்.

விவசாய சம்மேளனங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், இளைஞர் அமைபபுகள், மகளிர் அமைப்புகள், சனசமூக நிலையங்கள் என்பன தெனனைப் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொண்டு தமதுபகுதி தென்னைகளின் அபிவிருத்தி மற்றும் பாதிப்புகளை ஏற்படுததும் செயற்பாடுகளுக்கு பரிகாரம் தேடும் வகையில் செயற்படல் வேணடும்.

தென்னைச்சபை குறைந்த வளங்களுடன் தன்னால் இயலுமானவரை சேவை செய்து கொண்டு இருக்கிறது. கடந்த 15 வருடங்களுக்கு மேலாக தென்பகுதியைப் போன்று வசதி வாய்ப்புகள் எதுவும் இங்கு கிடைக்கவில்லை. என்வே மக்களின் தேவைகளை இயன்ற அளவு நிறைவேற்றித் தருவதற்கு நல்லூர் கமநல கேந்திர நிலையத்தில் உள்ள தென்னைச்சபைக் காரியாலயம் தயாராக இருக்கிறது.



**தென்னை, பனை, கமுகு போன்ற மரங்களில் தற்பொழுது பங்கசுத் தாக்கம் ஏற்பட்டு வருகிறது. குடாநாட்டின் பல பகுதிகளிலும் 'பைற்றொப்தரா' இன பங்கசுவின் தாக்கம் மிக மோசமாகக் காணப் படுகின்றது. நோய்த் தாக்கத்துக்கு உள்ளான தென்னை மரங்களைப் படத்தில் காணலாம்.**

## பாரினைத் தீனி போடும் பாதீனியம்

பரவுதே மெத்தப் பரவுதே
பாரினைத் தீனிபோடும் "பாதீனியம்"
அறியோம் இதன் அழிவுச் சக்தி
அறிந்திடில் விடுவோமா இதனை?

பிறந்திட்டது ஜமாக்காத் தீவில்
பின் வந்து பரவியது பூனாவில்
புகுந்துகொண்டது நம் பூமியில்
புகுத்திவிட்டார் அமைதிப் படையார்

தொட்டவுடன் கை வீங்கும்
பட்டவுடன் அரிப்பெடுக்கும் - இதைப்
பார்த்தவுடன் முகம் வீங்கும் - இதன்சக்தி
கேட்டவுடன் உடல் நடுங்கும்

பாதீனியம் என்ற பாதகச் செடிக்குப்
பார்த்துவைத்தான் உயரம்இரண்டு மீற்றர்
பறக்கும் இதன் மகரந்தம் எண்பதடி
பட்டவுடன் பிறப்பெடுக்கும் ஆஸ்மா

வீரியமும் விடமும் வீங்கிப் பெருக - இங்கு
வீரனாய்ப் படையெடுக்கும் பகைவனிவன்
கண்டும் காணாமல் கவலையின்றி இருந்துவிட்டால்
கலைத்திடுவான் காலன் எமை விரைந்து

பாதிக்கும் பயிரின் வளர்ச்சியை - இது
குறைத்துவிடும் விளைச்சல் பயிரில்
தடுத்துவிடும் விதை முளைப்பை
குலைத்துவிடும் மனித உருவத்தை

பூக்கு முன் இச் செடியைப்
பிடுங்கி எரித்திடுவீர்
பூத்தபின் இதன் அருகில்
போனால் மிக ஆபத்து

அறுகொடு வாழைத் தண்டுச்சாறு
அருந்தினால் இதன் விடம் அகலும்
ஏற்றிடு நீர் ஆகாரம் ஆனால்
எண்ணெய், திட உணவு அகற்றிவிடு

திட்டங்கள் உண்டு இதை அழிப்பதற்கு
திடம் கொள்வீர் மக்களே!
விவசாய பீடம் கொண்டது உறுதி
விரைவில் இதற்கொரு முடிவு அறுதி.

*- ஐயாத்துரை சிறிஞானநாதன்*
*(விவசாய பீடம்)*

# கட்டாய மதமாற்றத்தைத் தடுக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும்

## பிரதேச சபைத் தலைவர் உரை

இன்று எம்மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள கட்டாய மதமாற்றத்தை நாம் அனைவரும் ஒன்றிணைந்து தடுக்க முயற்சிசெய்ய வேண்டும்.

- இவ்வாறு வலிகாமம் மேற்குப் பிரதேச சபைத் தலைவர் ந.திரிலோகநாதன் தெரிவித்தார்.

சித்தன்கேணி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கமும் சனசமூகநிலையமும் இணைந்து நடத்திய முன்பள்ளி மாணவர்களின் 36ஆவது ஆண்டு விளையாட்டு விழா அண்மையில் சித்தன்கேணி ஸ்ரீ மாக கணபதிப் பிள்ளையார் ஆலய வீதியில் ஆசிரியை செல்வி லீலாவதி மாரிமுத்து தலைமையில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ந.திரிலோகநாதன் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

மக்களிடத்தில் இன்று ஏற்பட்டுள்ள வறுமையையும் இடம்பெயர்வையும் காரணமாகக் கொண்டு பல நூற்றுக்கணக்கான இந்துக்கள் மத மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இந்நிலை தொடருமாயின் இந்துசமயத்தின் வளர்ச்சியும் அபிவிருத்தியும் குன்றும். எனவே இந்நிலையை எல்லோரும் கருத்தில் கொண்டு செயலாற்ற வேண்டும்.

இந்துசமயத்தின் வளர்ச்சிக்கும் ஆலயங்களின் புனரமைப்புக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களும் நானும் எம்மால் இயன்ற வரை சேவையாற்றவுள்ளோம். அண்மைக்கால வன்செயல்களினால் சேதமாக்கப்பட்டு இதுவரை புனரமைக்கப்படாமல் இருந்த சகல ஆலயங்களும் புனரமைக்கப்படவுள்ளன. இதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன - என்றார்.(ம-175)

# தேசிய இராணுவ வீரர் தினம் நாளை கொண்டாட ஏற்பாடு

தேசிய இராணுவவீரர் தினத்தை நாடு முழுவதும் கொண்டாடுவதற்கு ஜனாதிபதியின் அறிவுறுத்தலின் படி இராணுவ சேவை அதிகார சபை ஏற்பாடுகளைச் .செய்துள்ளது.

பிரதான நிகழ்வு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க தலைமையில் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு ஜனாதிபதி காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

நாட்டுக்காக உயிர் நீத்த இராணுவத்தினருக்காக ஒரு நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப்படும். மௌன அஞ்சலியை அனைவரும் செலுத்த வேண்டுமென நாட்டில் சகல மக்களும் கேட்கப்பட்டுள்ளனர்.

அன்றைய தினம் நிட்டம்புவ ஸ்ரீ சங்கபோதி மகாவித்தியாலயத்தில் சிறப்பு வைபவங்கள் நடைபெறவுள்ளன.

செல்வந்தர்களின் நன்கொடைகளைக் கொண்டு இராணுவ சேவை அதிகார சபையினால் அமைக்கப்பட்ட 25வீடுகள் அன்றைய தினம் அந்தன கல்லையில் வீடற்ற இராணுவத்தினர் குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ளன.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## இலக்கியக் கட்டுரைகள்

இந்த நூல் மாணவர்களை விட ஆசிரியர்களுக்கே கற்பித்தலுக்குக் கூடுதலாகப் பயன்படும். எல்லா வகை இலக்கியங்களையும் படைத்த அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதிய கட்டுரைகள் அல்லவா? வாங்கி வாசித்துப் பயனடையுங்கள். (88666)

## இலகு திருமண சேவை

1970 ரேவதி 7இல் செவ்வாய்க் குற்ற முள்ள பட்டதாரி மணமகளுக்கு Professional/Degre தரத்திலும் (சீதனமுண்டு) 1964 திருவாதிரை 7 இல செவ்வாய்க் குற்றமுள்ள பட்டதாரி உத்தியோக மணமகளுக்கு அரச/தனியார் மணமக்கள் தேவை. தொடர்பு:- துரை விமலா, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். தொடர்பு:- ஞாயிறுகளில். (88680)

## இறைச்சிக்கோழி விற்பனை

Broiler, Cullbirds, Cockerels இறைச்சிக்கோழிகள் சுத்தம் செய்து (பாதிக்கோழி உட்பட) தினமும் காலை 6.30 - மாலை 6.00 வரை பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர். (88676)

## இசை வகுப்புகள்

எமது "நியூ வீணாகானம்". இசை மன்றில் வீணை, வயலின், பாட்டு, புல்லாங்குழல், ஓர்கன், கிற்றார், மெலோர்டிக்கா, மௌத்ஓர்கன், றெக்கோடர் வகுப்புகள். ஆரம்பம்: 9.00 A.M. - 6.00 P.M. தொடர்பு:- வாசுகி ரங்கன், 16/2, கச்சேரி நல்லூர் வீதி. 60, வைமன் வீதி, நல்லூர். (88710)

## புறொயிலர் விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழிகள தினமும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: செல்வம், மங்கள மாளிகை, மாயக்கை, பருத்தித்துறை. (கால்நடை தீவன விற்பனை நிலையம் அருகில்) (88535)

புறொயிலர் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்தல் இலவசம். மற்றும் லவ்பேட்ஸ் பச்சை, நீலம், மஞ்சள், வெள்ளை விற்பனைக்குண்டு. தொடர்பு: 31, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம். (கண்ணா வீடியோ சென்ரர் வளவு) (88559)

## புறொயிலர் குஞ்சுகள்

புறொயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- வை.சிவகுமார், 461, நாவலர் வீதி, அத்தியடி. அல்லது கிளீன் சொட் பின்புறம். யாழ்.பஸ்நிலையம். அல்வாயில் றஞ்சிதன், சுபகணநாதன் பண்ணை வீதி, மாலிசந்தி. (88712)

## விற்பனைக்கு

கொம்பிறேசர், பாத், டீபிறிசர், ஐஸ்பழப் பெட்டிகள், தட்டுக்கள், ஐஸ்கிறீம் மீற்றர் என்பன உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: தி.கஜன், 12/5, சந்தனமாதா கோயில் வீதி, பாண்டியன்தாழ்வு, சுண்டுக்குளி. (88717)

## திருமண சேவை

பட்டதாரிகள், விரிவுரையாளர்கள், டாக்டர்கள், ஆசிரியர்கள் அத்தோடு கனடா, லண்டன் பிரஜா உரிமை பெற்ற (வதிவிட சான்றிதழ்) மணமக்கள் எம்மிடம் உள்ளனர் திங்கள், புதன், வெள்ளி, சனி நாள்களில் 10 மணிமுதல் 4 மணிவரை தொடர்பு கொள்ளவும். கு.அருந்ததி "கமலக் கண்ணன் திருமண சேவை" இல. 3, மூத்தவிநாயகர் வீதி, கச்சேரி நல்லூர் றோட், நல்லூர். (88692)

## காணி விற்பனைக்கு

இருபாலை ஸ்ரீகற்பக விநாயகர் ஆலயத்துக்கு அண்மையில் 66 பரப்பு வயலும் தென்னங்காணியும் கடையிற் சுவாமி ஒழுங்கையில் 3 1/2 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி இரகுநாதமுதலியார், 39, பிறவுண் வீதி, நீராவியடி. (88595)

# வாழ்த்தி வரவேற்கின்றோம்

**மக்கள் வங்கி யாழ்.பிராந்திய**
**முன்னாள் முகாமையாளர்**
**உயர்திரு.சி.இளம்பிறைநாதன் அவர்கள்**

பதவி உயர்வுபெற்று மக்கள் வங்கி வட வலய உதவிப் பொது முகாமையாளராகப் பொறுப்பேற்பதையிட்டு எமது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து இரு கரங்கூப்பி அவரை வரவேற்கின்றோம்.

*- சாவகச்சேரி வணிக அபிமானிகள்.*

(88661)

உ
கணபதி துணை

# ஸ்ரீ சொர்ணசித்தி பஞ்சமுக விநாயகர் தேவஸ்தானம்

**அடியார்களே!**

உடுவில் ஸ்ரீ சொர்ணசித்தி பஞ்சமுக விநாயகர் ஆலயத்தில் பரிவார மூர்த்தியாக இருக்கும் அம்பாளின் கதவு அடைக்க வேண்டும் என்ற அன்னையின் வாக்கை ஏற்று 24-02-2001 தொடக்கம் கதவு சாத்தப்பட்டுள்ளது. அத் திருக்கதவைத் திறப்பதற்கு வேத பாராயணங்கள், பஜனைகள் ஓத வேண்டும் என்பதும் அன்னையின் வாக்கு. இவையெல்லாம் இடைவிடாது முறையாக பக்தி சிரத்தையுடன் ஓதினால் அத்திருக்கதவு அடியாரின் கண்ணுக்கு முன்பாக தானாகவே திறபடும் என்பதையும் அதனையே கூறுகிறாள். ஆகையால் திருமுறைகள் ஓதுபவர்கள் சமுகம் தந்து தங்களுடைய பணிகளைச் செய்யுமாறும் கேட்டுக்கொள்கிறோம். மேலும் வேதபாராயணத்திற்கே முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளது. ஆகையால் சகல அந்தணர்களும் வருகை தந்து வேதங்களை அம்பாளின் செவிக்குக் கேட்கச் செய்வதோடு இது தங்களின் கடமை என்பதை ஏற்று வருகை தருமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம். இதுவே சைவசமயத்தின் உயர்ச்சியை எடுத்துக்காட்டும் என்பதை இதன் மூலம் உறுதியாகக் கூறுகிறேன்.

நாளை (07-06-2001) வியாழக்கிழமை தொடக்கம் 72 மணித்தியாலங்கள் தொடர்ச்சியாக பஜனைகளும் வேதபாராயணங்களும் நடைபெறும் என்பதையும் அறியத்தருகின்றோம். இதில் சகலரும் வந்து கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

*உடுவில் வடக்கு,*
*சுன்னாகம்.*

- தேவஸ்தானம்.

(88720)

# இதய அஞ்சலி



**Dr.தம்பிஐயா அருமைத்துரை**
**R.M.O**

"இருந்தாலும் இறந்தாலும் பெயர் சொல்ல வேண்டும்
இவர் போல யாரென்று ஊர் சொல்ல வேண்டும"

என்ற வரிகளின் உண்மைத்தத்துவத்தை தனது வாழ்விலும் சாவிலும் நிரூபித்து அமரத்துவம் எய்திய மானிப்பாய் மத்திய மருந்தக மகப்பேற்றுமனை (C.D,Manipay) பொறுப்பதிகாரியும் முன்னாள் சங்கானை அரசினர் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரியும் மானிப்பாய் கோவிற்பற்று அரிமாக்கழக இரண்டாவது உதவித்தலைவருமாக இருந்து சிறப்புறச் சேவையாற்றி மக் கள் மனதில் நீங்காத இடம்பிடித்த

**Dr.தம்பிஐயா அருமைத்துரை அவர்களுக்கு**

மானிப்பாய், நவாலி, ஆனைக்கோட்டை, சுதுமலை வாழ்மக்கள் சார்பில் எமது இதய அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**மானிப்பாய் மத்திய மருந்தக**
**மகப்பேற்று மனை அபிவிருத்திச் சபையினர்.**

*அதிகார் செல்லமுத்து வீதி,*
*மானிப்பாய்.*

(88724)

## கட்டடத்திறப்பு விழா

புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயத்தின் புனரமைக்கப்பட்ட கட்டடத் திறப்பு விழாவும், தமிழ்த்தினமும் நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளன.

வித்தியாலய அதிபர் எஸ்.கே.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் ஊர்காவற்றுறை பிரதேச சபை தலைவர் ந.மதனராஜா பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக தீவக கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் த.தவராசா, வேலணைக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் சோ.தில்லைநாதன், வேலணை பிரதேச சபைத் தலைவர் ந.கருணாகரமூர்த்தி ஆகியோர் கலந்து கொள்வார்கள். கௌரவ விருந்தினராகத் தீவுப்பகுதி தெற்கு பிரதேச செயலர் செ.இரத்தினம் கலந்து கொள்வார். மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

(ம-135)

## பொதுக்கூட்டம்

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் பொதுக்கூட்டம் எதிர் வரும் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு நெல்லியடியில் இயங்கும் மன்றக் காரியாலயத்தில் நடைபெற உள்ளது.

இந்தக் கூட்டத்தில் வணிகர்களின் இழப்பீடு, கடன்பெறுவது, வணிகர்களின் எதிர்கால நலன்கள் ஆகியவை பற்றிய முக்கிய முடிவுகள் எடுக்க விருப்பதால் அனைத்து உறுப்பினர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு மன்றச் செயலாளர் அறிவித்துள்ளார்.

(ம-117)

## தொடர்புகொள்ளக் கோரிக்கை

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களை புனரமைப்பதற்கு விண்ணப்பித்தவர்களில் ஒரு தொகுதியினரின் விண்ணப்பங்களுக்குப் படையினரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வர்த்தக நிலையங்களைப் புனரமைப்பதற்கு விண்ணப்பம் செய்த வர்த்தகர்கள் சாவகச்சேரி வணிகர் மன்றத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ம-117)

# அறிவித்தல்

**யாழ்ப்பாணம் ஆரம்ப நீதிமன்றத்தில்**
**யாழ்ப்பாணம், ஆரம்ப நீதிமன்ற நீதிபதி**
**திரு.இ.த.விக்னராசா அவர்கள்**
**முன்னிலையில்**

வழக்கு இலக்கம் : 334. 01-06-2001

யாழ்ப்பாணம் ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலயத்தின் திருப்பணி வேலைகள் ஸ்தம்பிதம் அடையாமல் சிறப்பாகவும், துரிதமாகவும் நடைபெறுவதற்கு ஏதுவாக நீதிமன்றத்தின் முன் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட அனைவரும் இணங்கி ஏற்றுக்கொண்டதற்கமைய பின்வருமாறு நீதிமன்றம் கட்டளை இட்டுள்ளது.

1. இவ்வாலயத்தின் திருப்பணி வேலைகளுக்குப் பொறுப்பாக
01. நாகராசா கைம்பெண் சந்திரகுமாரி
02. சின்னச்சாமிஐயர் செல்வராசா குருக்கள்
03. நடராசா குருக்கள் சண்முகரத்தினஐயர்
04. சுப்பிரமணியஐயர் சிவசண்முகானந்த குருக்கள்
05. சுகிர்தம்மா சிவானந்தம்
06. முருகையா விஜயேஸ்வரன்
07. நடராசா இராஜதேவன்
08. குமாரசாமி சிவகுருநாதன்
09. சண்முகநாதன் சற்குணமூர்த்தி

ஆகியோர் கூட்டாகச் சேர்ந்து செயற்படவேண்டும்.

2. மேலே குறிப்பிட்டோர் ஒவ்வொரு கிழமையிலும் புதன்கிழமை, சனிக்கிழமை ஆகிய தினங்களில் பிற்பகலில் கோயில் மண்டபத்தில் கூடித் தீர்மானங்களை எடுத்து நடைமுறைப்படுத்த வேண்டும். கூட்டாகச் சேர்ந்து ஏகமனதாக முடிவெடுக்க முடியாதிருக்கும் பட்சத்தில் கூட்டத்தில் சமூகமாக இருக்கும் பெரும்பான்மையோரின் முடிவு அனைவரையும் கட்டுப்படுத்தும் என்றும்,

3. கூட்டக்குறிப்புக்களை திருமதி சுகிர்தம்மா சிவானந்தம் அவர்கள் ஒழுங்காக எழுதி வரவேண்டும் என்பதுடன் கூட்டத்திற்கு சமுகமளிப்போர் இவ்வறிக்கையில் கையொப்பமிட வேண்டும் என்பதுடன் இக்கூட்டத்தின் கோரம் குறைந்தது ஆறு (6) பேராக இருக்க வேண்டும் என்பதும் தேவை ஏற்படின் மேலே கண்டவாறு புதன்கிழமை, சனிக்கிழமை தவிர்ந்த வேறு நாள்களிலும் கூட்டத்தைக் கூட்டித் தீர்மானங்களை எடுப்பதற்கு முடியும். அவ்வாறு கூட்டம் கூட்டுவதற்கு குறைந்தது ஏழு (7) பேர் சம்மதம் தெரிவிக்க வேண்டும். என்றும்,

4. மேலே குறிப்பிட்டவாறு கூட்டத்தில் எடுக்கும் தீர்மானத்தின்படி செய்யப்படும் செலவுகளுக்கு இத்திருப்பணிக் குழுவில் உள்ள ஏழு (7) பேர் கையொப்பமிட்டு வங்கி முகாமையாளருக்கு படிவத்துடன் காசோலையையும் சமர்ப்பித்தால் அக்கொடுப்பனவுக்குரிய காசோலையை வங்கி முகாமையாளர் மாற்றிக் கொடுப்பதற்குரிய அனுமதியை நீதிமன்றம் வழங்கியுள்ளது என்றும் இப்படி அனுப்பப்படும் காசோலைகளை மாற்றிக் கொடுக்குமாறு நீதிமன்றின் பதிவாளர் வங்கி முகாமையாளருக்கு ஏற்கனவே அறிவித்துள்ளார் என்றும்,

5. மேற்படி ஆலயத் திருப்பணிக் குழுக் கூட்டத்திற்குத் தலைவராக குமாரசாமி சிவகுருநாதன் கடமையாற்ற வேண்டும் என்றும் அவர் சமுகமளிக்க முடியாத பட்சத்தில் அக்கூட்டத்தில் சமுகமளித்த ஏனைய உறுப்பினர்களில் ஒருவரை தற்காலிகமாகத் தலைவராகத் தெரிவு செய்து கூட்டத்தை நடத்த முடியும் என்றும்,

6.ஆலயப் புனருத்தாரண திருப்பணிகளுக்குக் கிடைக்கும் அன்பளிப்புகள் யாவும் வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம் என்ற பெயரில் சின்னச்சாமிக் குருக்கள் செல்வராசா குருக்கள், நாகராசா கைம்பெண் சந்திரகுமாரி, நடராசா குருக்கள் சண்முகரத்தினஐயர், சிவசுப்பிரமணிய குருக்கள், கைம்பெண் சிவபாக்கியம் ஆகியோரினால் நீதிமன்றக் கட்டளைப்படி யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள இலங்கை வங்கி மேற்றரக்கிளையில் வங்கிக் கணக்கு இலக்கம் சீ/24299 என்ற நடைமுறைக்கணக்கில் வைப்பில் இடப்படவேண்டும். என்றும்,

7.கோயில் புனருத்தாரணத் திருப்பணி நன்கொடைப் பற்றுச்சீட்டுகளுக்காக ஏற்கனவே சிவலோகநாதன் இராஜேந்திர குருக்களின் கையொப்பத்துடன் தயாரிக்கப்பட்ட பற்றுச்சீட்டுக்கள் றப்பர் முத்திரையிடப்பட்டு சின்னச்சாமிஐயர் செல்வராசா குருக்கள், நடராசா குருக்கள் சண்முகரத்தினஐயர் ஆகிய இருவராலும் கையொப்பமிட்டுப் பாவிக்கப்பட வேண்டும் என்றும் இப்பற்றுச்சீட்டுக்களை ஆலய அலுவலகத்தில் கடமை புரியும் பரமநாதனிடம் உரிய பணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம் என்றும்,

8. புனருத்தாரண வேலைகளின் கணக்கு விவரங்கள் யாவற்றையும் சிவஞானம் வெற்றிவேலாயுதம் என்பவர் பொறுப்பாக இருந்து பேணி வரவேண்டும் என்றும் இதற்கு திருமதி சுகிர்தம்மா சிவானந்தம் அனுசரணையாக இருந்து வரவேண்டும் என்றும்,

9. மேற்படி ஆலயத்திற்கு நித்திய பூசைகள்
(அ) சின்னச்சாமி குருக்கள் செல்வராசாக் குருக்கள்
(ஆ) நாகராசா கைம்பெண் சந்திரகுமாரி
(இ) நடராசாக் குருக்கள் சண்முகரத்தினஐயர்
(ஈ) சிவசுப்பிரமணியஐயர் கைம்பெண் சிவபாக்கியம் ஆகிய நால்வரிடையேயும் ஆளுக்கு ஏழு(7) நாள்களுக்கு சுழற்சி முறையில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது என்றும் தட்சனை, அர்ச்சனைப் பற்றுச்சீட்டுக்கள், பூசை, அபிஷேகம், திருப்பணி உண்டியல் அல்லாத ஆலய உண்டியல்களில் இடப்படும் பணம் ஆகியவை அவரவர் பூசைநாள்களில் அவரவர்களுக்கே உரியது என்றும்,

10. மேற்படி ஆலயத்தின் புனருத்தாரணத் திருப்பணிக்கென இரு உண்டியல்கள் வேறாக வைக்கப்பட்டுள்ளது என்றும் ஏற்கனவே கோயிலில் திருப்பணி நித்தியபூசைகளுக்குப் பொறுப்பான சிவலோகநாதன் இராசேந்திரக் குருக்கள் தற்போது எவ்விதமான பொறுப்புக்களிலும் இல்லை என்றும் ஏற்கனவே வங்கியிலிருந்த நடைமுறைக் கணக்கு நீதிமன்றின் கட்டளைக்கமைய மூடப்பட்டு அதிலிருந்த பணம் யாவும் மேலே குறிப்பிட்ட வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம் என்ற பெயரில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி இலங்கை வங்கி கிளையில் சீ/24299 இலக்க கணக்கிற்கு மாற்றப்பட்டு விட்டது என்றும் நீதிமன்றம் கட்டளைவிட்டுள்ளது.

11. இவ்வழக்கில் மன்றில் சமுகமளித்தவர்களில் பூரண இணக்கப்பாட்டிற்கமைய நீதிமன்றம் மேலே காணப்படுகின்றவாறு இட்ட கட்டளைப்படி இக்கோயிலின் புனருத்தாரண பணி வேலைகள் ஒழுங்காகவும் விரிவாகவும், சீராகவும், விரைவாகவும் நடைபெற்று வருவதாக 21-05-2001 அன்று நீதிமன்றில் மேற்படி குழுவினராலும் சட்டத்தரணிகளாலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றின் கட்டளைப்படி

**க.மீரா,**
பதிவாளர்,
நீதிவான் நீதிமன்றம்/ஆரம்ப நீதிமன்றம்.
யாழ்ப்பாணம்.

01-06-2001

(88722)

மக்கள் அவல வாழ்க்கை நடத்தும் யாழ். குடாநாட்டில்

# குடிசன மதிப்பீட்டை நிறுத்தக்கோரி

# ஜனாதிபதிக்கு மகஜர் அனுப்ப முடிவு

## மனித நேய அமைப்புக்களின் ஒன்றியம் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 6

போரினால் சிதைந்து மக்கள் இடம்பெயர்ந்து அவல வாழ்க்கை நடத்தும் இன்றைய சூழலில் யாழ். குடாவில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளவிருக்கும் குடிசன மதிப்பீட்டை நிறுத்தவேண்டும் என்று யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பான மகஜர் ஒன்று மேற்படி ஒன்றியத்தினால் ஜனாதிபதிக்கு ஓரிரு தினங்களில் அனுப்பி வைக்கப்படவுள்ளது.

நேற்றுக் காலை கோயில் வீதியிலுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய மண்டபத்தில் கூடிய 40க்கும் மேற்பட்ட மனிதநேய அமைப்புகளின் பிரதிநிதிகள் அரசாங்கத்தினால் யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள குடிசன மதிப்பீடு தொடர்பாக ஆராய்ந்தனர்.

போரினால் பலர் கொல்லப்பட்டும், காணாமற்போயும், இடம் பெயர்ந்தும் உள்ள இந்த மண்ணில் குடிசன மதிப்பீடு மேற்கொள்வது ஒரு நியாயமற்ற செயலாகும் என்றும் —

இது யாழ்ப்பாண மக்களுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால் இந்தமதிப்பீட்டு வேலைகளை நிறுத்த வேண்டும் என்றும் கூட்டத்தில் கலந்துகொண்ட பலரும் வலியுறுத்தினார்கள்.

இதனைத் தொடர்ந்து குடிசன மதிப்பீட்டை நிறுத்தக் கோரி ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்று அனுப்புவது என்றும் இந்த மகஜரின் பிரதிகள் தமிழ்க் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட சகல நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்களுக்கும் அனுப்பி வைப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

### மனித உரிமைகள் அமைப்பை உருவாக்க தீர்மானம்

இக் கூட்டத்தில் 'யாழ். மனித உரிமைகள் அரங்கு' என்னும் பெயரில் மனித உரிமைகள் அமைப்பு ஒன்று அங்குரார்ப்பணம் செய்வது என்றும் தீர்மானிக்கப்பட்டது. இந்தக் குழுவின் யாப்பினைத் தயாரிப்பதற்கு என ஒன்பது பேரடங்கிய குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

யாழ்ப்பாண மக்கள் தமது அபிலாசைகளை வெளியிடுவதற்கும் — அவர்கள் ஒன்றுகூடும் மற்றும் கருத்து வெளியிடும் சுதந்திரத்துக்கு வாய்ப்புகள் வழங்க வேண்டும் என்று ஜனாதிபதி சந்திரிகாவுக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைக்க வேண்டும் என்றும் இம்மகஜரின் பிரதிகள் கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்களுக்கும் அனுப்பி வைக்க வேண்டும் என்றும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (க-5)

## கொழும்பு மாநாட்டுக்கு யாழ். மீனவப் பிரதிநிதிகள்

### நேற்று 53 பேர் கப்பலில் புறப்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 6

யாழ். மாவட்ட மீன்பிடித் துறையை அபிவிருத்தி செய்வதற்கும் மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத்தீர்வு காணும் நோக்கத்துடனும்கொழும்பில் நடைபெறவுள்ள உயர்மட்ட மாநாட்டில் கலந்துகொள்வதற்காக யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்களின் பிரதிநிதிகள் நேற்று கொழும்பு பயணமாகியுள்ளனர்.

வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு-கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டுக்கு யாழ். வட்டத்திலுள்ள 25 கடற்றொழிலாளர் சங்கங்களைச் சேர்ந்த 53 கடற்றொழிலாளர்கள் நேற்று கப்பல் மூலம் திருமலை பயணமாகியுள்ளனர்.

யாழ். மாவட்டக் கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கோடு எதிர்வரும் 7 ஆம் திகதி நாடாளுமன்ற கட்டடத்தில் நடைபெறவுள்ள இந்த உயர்மட்ட மாநாட்டில், வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு-கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மீன்பிடி, நீரியல் வளத்துறை அமைச்சர் மகிந்த ராஜபகஷ, சமூக சேவைகள் அமைச்சர் மில்றோய் பெர்னாண்டோ மற்றம் உயர் அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொள்கின்றார்கள்.

53 கடற்றொழிலாளர்களும் கொழும்பு சென்று மாநாட்டில் பங்கு பற்றி மீண்டும் யாழ். திரும்புவதற்குரிய சகல பயணச் செலவுகளையும் ஈ.பி.டி.பி.அமைப்பு பொறுப்பேற்றுள்ளதாக கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். (க)

## சரசாலைக்கு விசேட பஸ் சேவை

சரசாலை மற்றும் மட்டுவில் பிரதேசங்களில் மீளக் குடியமரும் பொதுமக்களின் நன்மை கருதி கடந்த 3ஆம் திகதி முதல் பருத்தித்துறையில் இருந்து சரசாலை 5ஆம் குறிச்சி வரைக்கும் வடபிராந்திய போக்குவரத்து சபையினால் விசேட பஸ் சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது

இந்த பஸ் சேவை பருத்தித்துறை பிரதான பஸ் நிலையத்தில் இருந்து மந்திகை, நெல்லியடி, கல்லிக்காய், யார்க்கரு, கப்பூது ஊடாக சரசாலை 5 ஆம் குறிச்சி வரைக்கும் தினசரி இரு தடவைகள் நடைபெற்று வருகிறது. (க-5)

## கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 6

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றிய விசேட மஹாசபைக் கூட்டம் இன்று புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பிரம்மஸ்ரீ ச. மகேஸ்வரக் குருக்கள் தலைமையில் நீராவியடி கல்லூரி வீதியில் உள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது, (க-4)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூன் 6

ஊர்காவற்றுறை, புளியங்கூடல் செருத்தனைப்பதி ஸ்ரீ மகாமாரி அம்பாள் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை10மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறும் உற்சவ நிகழ்வுகளில் எதிர்வரும் 16 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ம-15)

★ ★ ★

வல்வெட்டித்துறை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நாளை வியாழக்கிழமை காலை 9.10 மணிமுதல் நடைபெறும்.

இதற்கான கிரியாரம்பம் இன்று காலை 7. 46 மணிக்கு மேல் ஆரம்பமாகும். (ம-15)

★ ★ ★

பருத்தித்துறை புனித அந்தோனியார் தேவாலய வருடாந்த உற்சவம் கடந்த4 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

தொடர்ந்து 9 நாள்கள் இடம்பெறும் இவ்விழாவில் எதிர்வரும் 11 ஆம் திகதி நற்கருணை வழிபாடும், 12 ஆம் திகதி திருப்பலி ஒப்புக்கொடுப்பதுடன், திருச்சொரூபப் பவனியும் இடம்பெறும். (ம-15)

## குருநகர் சிறுவர் பாடசாலைக்கு புதிய கட்டடம் வேண்டும்

### பெற்றோர்கள் அமைச்சரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 6

குருநகர் எவ் மேரியா சிறுவர் பாடசாலைக்குப் புதிய கட்டடம் அமைத்துத்தரக் கோரிப் பாடசாலையின் அதிபர் அருட்சகோதரி மேரி யோசெப்பின் பெலிசியான் உட்படச் சுமார் 70 க்கும் மேற்பட்ட பெற்றோர்கள் நேற்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்து பேச்சு நடத்தியதாக ஈ.பி.டி.பியின் செய்திக் குறிப்பு ஒன்று தெரிவிக்கிறது.

பாடசாலையில் தற்போது உள்ள கட்டடத்தைத் திருத்தி அமைப்பதுடன் புதிய இரண்டு மாடிக் கட்டடத்தை அமைத்துத் தருமாறு அதிபரினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு பதிலளித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, முதற்கட்டமாகத் தற்போதுள்ள கட்டடத்தைத் திருத்தியமைக்க நடவடிக்கை எடுப்பதாகவும்

இதற்காக உடனடியாகக் கட்டடத்தைப் பார்வையிட பொறியியலாளர் ஒருவரை அனுப்பி வைப்பதாகவும் அவரது மதிப்பீட்டு அறிக்கையின்படி செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்,

1958 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட எவ். மேரியா சிறுவர் பாடசாலையில் 120 சிறார்களுக்கு மேல் கல்வி கற்றுவருவதாகவும் இப் பாடசாலை கடந்த கால யுத்த நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் உபகரணங்கள் களவாடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது,

கலந்துரையாடலுக்கு வருகை தந்திருந்தவர்கள் மத்தியில் உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கட்டடங்களை புனரமைப்பதுடன் மட்டும் நீங்கள் நின்று விடக்கூடாது அவற்றைப் பாதுகாக்கவும் முன்வர வேண்டும். எமது அபிவிருத்தித் திட்டங்கள் யாவும் கடற்கரையில் கட்டிய மணல் வீடுகள் போல் ஆகிவிடக்கூடாது இவற்றைப் பாதுகாப்பது உங்களின் கடமை எனவும் தெரிவித்தார்— என்றும் அந்தச் செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(க)

# ஒருபுறம் தேசிய அரசுக்கு முயற்சி! மறுபுறம் ஆட்சி கவிழ்ப்பில் தீவிரம்!!

கொழும்பு, ஜூன் 6

யுத்தத்திற்கும் நாட்டில் நிலவும் பொருளாதாரப் பிரச்சினைக்கும் தீர்வினைக் காண்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டு தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்கும் முன் முயற்சிகளில் அரசாங்க மற்றும் எதிர்க்கட்சிக் குழுக்கள் கடந்த சில தினங்களாக தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக கொழும்பு சிங்களப் பத்திரிகை ஒன்று தெரிவிக்கிறது.

சுமார் இரு வாரங்களாக இது தொடர்பான பேச்சு வார்த்தைகள் நடைபெற்று வருவதாகவும் அக் கட்சிகளுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பிலுள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டல்களிலும் முக்கிய அரசியல் வாதிகளின் இல்லங்களிலும் பேச்சுக்கள் நடைபெற்று வருவதாகவும்—

பேச்சுகள் குறிந்து அரசாங்க மற்றும் எதிர்கட்சிப் பிரமுகர்களுக்கு அறிவிக்கப்பட்டுவருவதாகவும் — தெரிவிக்கப்படுகிறது

அதேசமயம் மறுபுறத்தில்— ஐக்கிய தேசியக் கட்சியால் இம்மாத இறுதியில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு, திரட்டும் முயற்சியில் ஐ. தே கட்சியும் பிரேரணையைத் தோற்கடிக்கும் முயற்சியில் அரசாங்கக் கட்சியும் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப் படுகிறது. (உ)

அரசு முன்வைக்கும்

## அரசமைப்புத் திருத்தத்திற்கு ஐ.தே.க. 11எம்.பிக்கள் ஆதரவு?

கொழும்பு, ஜூன் 6

வடக்கு – கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வாக அரசாங்கத்தால் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ள அரசமைப்புத் திருத்தத்திற்குப் பூரண ஒத்துழைப்பை வழங்கத் தாங்கள் தயாராகவுள்ளதாக ஐ. தே. கட்சியைச் சேர்ந்த 11 நாடாளுமன்ற உறுப்பினர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர் எனக் கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

அரசமைப்புத் திருத்தத்திற்குப் புத்துயிர் அளிக்க ஜனாதிபதி எடுக்கும் முயற்சிகளுக்கு ஐ. தே. கட்சியைச் சேர்ந்த ஒருசிலர் தனிப்பட்ட விதத்திலும் வேறு வழிகளிலும் தமது விருப்பத்தைத் தெரிவித்துள்ளனராம்:

இவர்களில் ஒரு சிலர் அரசாங்கக் கட்சியில் இணைந்து அரசுக்கு ஒத்துழைப்பு வழங்க விருப்பதாகவும் மற்றும் சிலர் ஐ. தே. கட்சியிலே அங்கம் வகித்தவாறு அரசுக்கு ஆதரவு வழங்க விருப்பதாகவும் தெரிய வருகிறது,

— இவ்வாறு அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்தது.

ஐ. தே. கட்சியைச் சேர்ந்த 11 எம். பிக்கள் தங்களுக்கு ஆதரவு தர முன்வந்திருப்பதாக பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கவும் கருத்து வெளியிட்டிருக்கின்றார். (உ)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி மாணவன்

செல்வன்

### கந்தப்பு இராகுலன்

(2001 வர்த்தகப் பிரிவு மாணவன்)

அவர்கள் 04 - 06 – 2001 இல் அகால மரணமடைந்ததையிட்டு அதிர்ச்சியும் வேதனையும் அடைந்துள்ளோம். அவரின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர்,
ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

யா/விக்னேஸ்வராக் கல்லூரி.
கரவெட்டி, (சி/17008)

# நன்றி கூறி வாழ்த்துகின்றோம்

நாவாந்துறை சேமக்காலையைப் பயன்படுத்துவதற்கு முதல் நடவடிக்கையாக மிதிவெடிகளை அகற்ற நடவடிக்கை எடுத்தமைக்காக

வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும்
வடக்கு - கிழக்கு தமிழ் விவகார அமைச்சரும்,
ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் பொதுச் செயலாளருமாகிய
மாண்புமிகு அமைச்சர்

**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
**(நாடாளுமன்ற உறுப்பினர்)** அவர்களுக்கும்
தோழர்கள்
**றீகன், கேதீஸ்** அவர்களுக்கும்

மற்றும் இந்நடவடிக்கைக்கு உதவிய அனைவருக்கும் எமது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாவாந்துறை
புனித மரியாள், புனித நீக்கிலார்
பங்கு மக்கள்.

(88731)

# கண்ணீர் அஞ்சலி

## நீதியரசர் கே.பாலகிட்ணர்

கொக்குவில் இந்துக்கல்லூரியின் பழைய மாணவரும் ஓய்வுபெற்ற மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசருமான கௌரவத்திற்குரிய **அமரர் பாலகிட்ணர்** அவர்களின் பிரிவினையொட்டி எமது ஆழ்ந்த துயரத்தை அவரது குடும்பத்தினருடன் பகிர்ந்து கொள்வதோடு, அவரது ஆத்மசாந்திக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பழைய மாணவர்கள், பெற்றோர்கள்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

(C/17002)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மொட்டென
தாயின் மடியில்
04 - 10 - 1978



பட்டென
இறைவன் அடியில்
20 - 05 - 2000

## அமரர் சோமு விஜயகுமார் (ஐயா)

திதி: 06-06-2001

ஓர் ஆண்டு கடந்தாலும் உங்களை மறக்க முடியவில்லை
சீரான உம் வாழ்வை இடைநடுவில் காலனவன் பறித்ததேனோ?
அகத்தில் உம் நினைவு ஒளி வீசும்.

*நிரந்தர முகவரி:*
*நுணாவில் மேற்கு,சாவகச்சேரி.*
*தற்காலிக முகவரி:*
*ஏழாலை மேற்கு, ஏழாலை.*

என்றும் உங்கள்
நினைவுகளுடன் வாழும்
குடும்பத்தினர்.

(88728)

## இரு பொலீஸார் காயம்

கொழும்பு,ஜூன்6

களுத்துறைப் பொலீஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியின் போது இடம் பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் இரு பொலீஸ் கான்ஸ்டபிள்கள் காயமடைந்தனர்.

அமைச்சர் ஒருவரின் மெய்ப்பாது காப்பு உத்தியோகத்தர்களே இவ்வாறு காயமடைந்துள்ளனர். இவர்கள் காயமடைந்ததற்கான துப்பாக்கிப் பிரயோகம் தவறுதலான விபத்தா அல்ல திட்டமிட்டுச் செய்யப்பட்ட செயலா என்பது குறித்து விசாரணைகள் நடத்தப்படுகின்றன. (ம)

## யாழ்.மணிக்கூட்டு கோபுரம் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்6

கடந்தகால யுத்த சூழ்நிலையால் சேதமடைந்து செயற்படாமல் இருந்த யாழ்ப்பாணம் மணிக்கூட்டுக் கோபுரத்தைத் திருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ்.மாநகர சபை ஊழியர்களால் நேற்று முன்தினம் திருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. மணிக்கூட்டுக் கோபுரத்தை முழுமையாகத் திருததி மீண்டும் இயங்கச் செய்வதற்கு இரு மாத காலம் தேவைப்படும் என்று ஊழியர்கள் தெரிவித்தனர். (க-6)

## வல்வையில் கண் பரிசோதனை முகாம்

யாழ்ப்பாணம்,ஜூன்6

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை ஏற்பாடுசெய்துள்ள ஒன்பதாவது இலவச கண் பரிசோதனை முகாம் எதிர்வரும் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு மேற்படி வைத்திய சாலையின் கிளினிக் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து இடம்பெயர்ந்து வடமராட்சிப் பகுதியில் வசிக்கும் மக்களுக்கென இந்த மருத்துவ முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த முகாமில் கலந்து கொள்ளவுள்ளவர்களுக்கான பதிவுகள் எதிர்வரும் 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறும் எனவும் -

உலர்உணவு அட்டை வைத்திருக்கும் இடம்பெயர்ந்த மக்கள் பதிவுகளை மேற்கொள்ளலாம் எனவும் மாவட்ட வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (க-7)

SVC

**ஸ்ரீ வல்லிபுரா போட்டோ**

எதிர்வரும் 08-06-2001 அன்று புகைப்படச் சுருள்களும் வீடியோ கசற்றும் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படும்.

*நல்லூர்* ☎ *021 2604*
*புலோலி* ☎ *070 212720*

(88734)

உ

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம!
ஸ்ரீ காமாக்ஷி அம்பிகை துணை

# திருமாங்கல்யதாரண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான விஷுவருடம் வைகாசி மீ 24 ஆம் நாள் நாளை (07-06-2001)வியாழக்கிழமை முற்பகல் 10.40 மணி முதல் 12.16 மணிவரைக்குள் வரும் சிங்கலக்கின சுபமுகூர்த்தத்தில்

எமது புத்திரன்
திருநிறை மங்களச் செல்வன்
**திருமாறன் (பிரபு)**
அவர்களுக்கு



எமது புத்திரி
திருநிறை மங்களச் செல்வி
**கங்கா**
அவர்களை

யாழ்.வண்ணை ஸ்ரீ காமாஷி அம்பாள் ஆலய மண்டபத்தில் வைத்து திருமணம் செய்து வைக்கப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் எமது உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் மற்றும் அனைவரும் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்தேகும் வண்ணம் அன்புரிமை தழுவி அழைக்கின்றோம்.

* எல்லோருக்கும் தனிப்பட்ட அழைப்பு வழங்கமுடியவில்லை. ஆகவே இந்தப் பத்திரிகை அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று சமுகந்தந்து புதுமணமக்களை வாழ்த்தி ஆசீர்வதிக்குமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

**திரு.திருமதி க.செல்லத்துரை குடும்பத்தினர்**
25/8 காங்கேசன்துறை வீதி,
கட்டாதெரு,
அரசடி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

**திரு.திருமதி க.சாந்தகுமாரன்**
*(தீயணைப்புச் சேவை, யாழ்.மாநகரசபை)*
**திரு.இ.வே.கந்தசாமிப்பத்தா** *(பேரன்)*
555/3, கே. கே. எஸ். வீதி, நாச்சிமார் கோயிலடி,
மதவடி ஒழுங்கை, யாழ்ப்பாணம்

*இரு வீட்டார் அழைப்பு*

(88777)

அராலி இந்துக்கல்லூரி
இருமாடிக் கட்டடத்துக்கான

# அடிக்கல் நடும் வைபவம்

நிகழும் விஷு வருஷம் வைகாசி மாதம் 23 ஆம் நாள் இன்று (06-06-2001) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் எமது கல்லூரி இரண்டுமாடிக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் வைபவம் நடைபெறும்.

மேற்படி கட்டடத்துக்கான அடிக்கல்லை வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவரும் ஈ.பி.டி.பி. இந்துசமய விவகாரப் பொறுப்பாளரும் வட்டுக்கோட்டைத் தொகுதி அமைப்பாளருமான

**திரு.ந.திரிலோகநாதன் அவர்கள்**

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சம்பிரதாய பூர்வமாக நட்டுவைப்பார் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

அனைவரையும் விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலைச் சமூகத்தினர்.

(C/17005)

# பெரு மதிப்புடன் நன்றி கூறுகின்றோம்



கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய புனரமைப்பு, புனர்நிர்மாணத் திருப்பணிக்கு முதற்கட்டமாக நிதியுதவி வழங்கியமைக்காக வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு -கிழக்கு தமிழ்மொழி விவகாரங்கள் அமுலாக்கல் - இந்து கலாசார அமைச்சரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி செயலாளர் நாயகமுமான

மாண்புமிகு அமைச்சர்

**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களையும்

யாழ்.மாவட்ட ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்களான

**உயர்திரு. சி.தவராசா**

அவர்களையும்

**உயர்திரு.கா.வே.குகேந்திரன்** (ஜெகன்)

அவர்களையும்

மேற்படி ஆலயத்துக்கு நேரடியாகப் பலமுறை வந்து பார்வையிட்டு ஆலயத்தின் தேவையைப் பரிந்துரைத்து ஆவன செய்த நல்லூர் பிரதேச சபைத் தலைவரும் யாழ். மாவட்ட ஈ. பி. டி. பி. உதவி அமைப்பாளருமான

**உயர்திரு. க.மணிபல்லவராஜன்**
**(நிசாந்தன்)**

*அவர்களுக்கும் எமது உளங்கனிந்த நன்றிகள்.*

*ஆலய சேவையில்*

***கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன்***
***ஆலய நிர்வாக சபையினர்.***

(88733)

# CONGRATULATIONS SIR

## MR.A.NADARAJAH

The Principal of J/Manipay Sothy Vembady
Vidiyasalai is promoted to Principal Grade 2-1.
I wish him all success and Prosperity.

**U.SAHANA**
(STUDENT)

(88726)

# கண்ணீர் அஞ்சலி



அமரர்
**செல்வநாயகம் சற்குணாநந்தன்**
*(வீனஸ் டில்கா, உரிமையாளர்)*

அன்பு மொழி பேசியெம்மை
அரவணைத்த தெய்வமே!
அவனியிலே நின் பிரிவால்
ஆறுதலை நாமிழந்தோம்!

எமது நண்பரும் முதலாளியுமாகிய செல்வநாயகம் சற்குணாநந்தன் அவர்களின் திடீர் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

***செல்வா வோச் வேக்ஸ்,***
*286, ஸ்ரான்லி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

பிரிவால் துயருறும்:
**செல்வசேகரம்**
**குடும்பத்தினர்.**

(C/17006)

# பேராசிரியர் சண்முகதாஸின் ஆய்வுநூல் தமிழ்த்தாய்க்குக் கிடைத்த பொக்கிஷம்

## பேராசிரியர் நந்தி விதந்துரை

யாழ்ப்பாணம்,ஜுன்6

தமிழ்த்தாய்க்கு பரிசாக அளிக்கப்பட்ட பெரும் பொக்கிஷம் இந்த ஆய்வு தொகுப்பு நூல். நூறு வருடங்களின் பின்பும் பேராசிரியர் சண்முகதாஸின் பெயர் நிலைத்திருக்கும் என்பதற்கு இந்த நூல் ஒரு சான்று. யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை செய்த மாபெரும் கைங்கரியங்களில் ஒன்று இந்த நூலை வெளியிட்டு வைத்தமையாகும்.

இவ்வாறு நேற்று யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற பேராசிரியர் சண்முகதாஸின் மணிவிழா நிறைவு ஆய்வு நூல் வெளியீட்டு விழாவில் உரையாற்றிய வாழ்நாள் பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம் (நந்தி) தெரிவித்தார்.

இந்நிகழ்வுக்கு துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தலைமை வகித்தார்.

பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம் தமது வெளியீட்டுரையில் மேலும் கூறியதாவது:-

கடந்த நாற்பது வருடங்களாகப் பேராசிரியர் எழுதிய 60 ஆய்வுக் கட்டுரைகள் இந்நூலில் உள்ளன. மிகவும் பயனுள்ள இந்தக் கட்டுரைகளைப் படிப்பதற்குப் பல நாள்கள் செல்லும். இவற்றை ஒரே மூச்சில் படித்து முடிக்க முற்பட்டால் மூச்சு அடங்கிவிடும். அவ்வளவு பெரிய கட்டுரைகள்.

நூலின் பெருமைகளைச் சொல்லும் போது நூலில் உள்ள குறைகளையும் சொல்ல வேண்டும். தமிழுக்குப் பெருமை சேர்த்த சேர்த்துக்கொண்டிருக்கின்ற பேராசிரியரின் கட்டுரைகள் அடங்கிய இந்த நூலில் அவர் பெயர் ஓர் இடத்தில் கூட தமிழில் இல்லை. இது மாபெரும் தவறாகும். முன் அட்டையில் ஒரு தமிழ்ச்சொல் கூட இல்லை. நூலின் தொகுப்பாளர்கள் இந்த விடயத்தில் அக்கறை எடுக்கவில்லை. இனிமேல் இவ்வாறான தவறு நடக்காமல் செயற்படுங்கள்.

தமிழ்க்கட்டுரைகளை ஒரு தொகுப்பாகவும், ஆங்கிலக் கட்டுரைகளை இன்னொரு தொகுப்பாகவும் வெளியிட்டிருந்தால் ஆங்கிலத் தொகுப்பு உலக நாடுகள் அனைத்துக்கும் சென்றிருக்கும்.

இந்தப் பிழைகளைச் சுட்டிக் காட்டுவதால் நூலின் தரத்தை குறைத்து மதிப்பிடுவது என்று அர்த்தமல்ல. மிகவும் பயனுள்ள எதிர்காலத்துக்குத் தேவையான ஆய்வுகள் இந்த நூலில் உண்டு - என்றார்.

### உந்து சக்தியாக அமையும்

பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தமது தலைமையுரையில் தெரிவித்ததாவது:-

கடந்த நாற்பது வருடங்களாக நானும் பேராசியர் சண்முகதாஸும் ஒன்றாகக் கல்வி கற்று, தொழில் புரிந்து, நட்புடன் பழகி வருகின்றோம். இந்தக் காலப்பகுதியில் இவர் சைவம், தமிழ், சமயம், சமூகம், தமிழாராச்சி ஆகிய பணிகளில் ஈடுபட்டு வருகிறார். அது மட்டுமன்றி வெளிநாடுகளுக்கும் சென்று ஆய்வுகளையும் மேற்கொண்டு வருகிறார்.

இப்படிப்பல பணிகளை மேற்கொண்டு வருகின்ற ஒருவரின் ஆய்வுக்கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடுவது மிகவும் சிறப்பான ஒரு காரியமாகும். ஐரோப்பிய நாடுகளில் வாழ்கின்ற இலங்கைத் தமிழ் மக்களுக்கு இந்த நூல் பெரும் உந்து சக்தியாக இருக்கும் - என்று தெரிவித்தார்.

சிவாகம கலாநிதி நா.சர்வேஸ்வரக்குருக்கள் தனது அருளாசியுரையில் -

முருகன், நக்கீரர், அகத்தியர் போன்று பேராசிரியர் சண்முகதாஸும் தமிழ்த்துறையின் தலைவராக இருந்தார் என்பது பெருமை. இவரது [illegible] ஆற்றலும், கடமையுணர்வும் போற்றத்தக்கன. அவர் சளைக்காது, ஓய்வெடுக்காது இன்னும் பல காலம் தமிழுக்கும், சமுதாயத்துக்கும் பணியாற்ற வேண்டும் - என்று தெரிவித்தார்.

கலைப்பீடாதிபதி செ.பாலச்சந்திரன் தமது வாழ்த்துரையில் -

எங்கள் மத்தியில் வாழ்ந்து வருகின்ற மேருமலை பேராசிரியர் சண்முகதாஸ் ஆண்டவனின் சந்நிதானத்தில் இறைவனின் பெருமையைப் பேசி வருகின்ற முதல் பேராசிரியர் இவர்தான் - என்றார்.

மற்றும் இந்த நிகழ்வில் தமிழ்த்துறைத் தலைவர் எஸ்.சிவலிங்கராசா, விஞ்ஞானத்துறைப் பீடாதிபதி பேராசிரியர் சி.குமாரவடிவேல், இந்து நாகரிகத்துறைத் தலைவர் ப.கோபாலகிருஷ்ண ஐயர், சமூகவியல், அரசறிவியல்துறைத் தலைவர் கலாநிதி நா.சண்முகலிங்கன், வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், பேராசிரியர் கா.குகபாலன், முதுநிலை விரிவுரையாளர் ம.இரகுநாதன், விரிவுரையாளர் க.அருந்தாகரன் மற்றும் ஆசிரியர் சங்கம் சார்பாக க.தேவராஜா, நிதியாளர் க.கனகரட்ணம், ஊழியர்கள் சார்பாக க.இரத்தினசபாபதி ஆகியோரும் உரையாற்றினர்.

(அ-10)

## இராஜகோபுர திருப்பணிகள்

கோப்பாய்,ஜுன்6

நீர்வேலி அரசகேசரி பிள்ளையார் கோயில் இராஜகோபுர திருப்பணிகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளன.

இதேவேளை, ஊரெழு அரசடி வீரகத்தி விநாயகர் ஆலய இராஜகோபுர திருப்பணிகள் மற்றும் வெளி வீதி செப்பனிடல் பணிகளும், கோப்பாய் பலானை கண்ணகை அம்மன் தேர் கொட்டகை படி அமைத்தல் ஆகிய திருப்பணிகளும் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன. (க-72)


## இன்முகத்துடன் வரவேற்கின்றோம்

எமது கல்லூரி இன்ரறக்ட் கழகத்தின் 15 ஆவது வருட நிறைவை யொட்டி இன்று (06-06-2001) புதன்கிழமை காலை 9.00 மணிக்குக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறும் 'சுரபி' மலர் வெளியீட்டு வழாவினிலே பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளும்

றோட்டறி மாவட்ட ஆளுநர்

**கிரிஷ் ராஜேந்திரன்**

அவர்களையும்

மற்றும் நிர்வாக உறுப்பினர்களையும் வருக வருகவென இன்முகத்துடன் வரவேற்கின்றோம்; மகிழ்ச்சி அடைகின்றோம்.

இன்ரறக்ட் கழகம்,
கொக்குவில் இந்துக்கல்லூரி.

(C/17002)


## 31ஆம் நாள் நினைவு அஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு 28 - 06 - 1924 உதிர்வு 07 - 05 - 2001

பத்தமேனி, அச்சுவேலி

### திருமதி குமாரசுவாமி சரஸ்வதி

அவர்கள்

எம் குடும்பத் தலைவியாய், எம் இதய தீபமாய் எம் அன்பின் பொக்கிஷமாய் விளங்கி எம்மை வழி நடத்திய அன்புத் தெய்வமே!

உங்கள் பிரிவை எம்மால் சகிக்க முடியவில்லை. பெருந் துக்க சாகரத்துள் அமிழ்ந்தித் தத்தளிக்கின்றோம்.

**உங்கள் சுந்தரவடிவத்தை இனி**
**நாம் காண்பது தான் எப்போது?**
**உங்கள் அமிழ்தனைய பேச்சை இனி**
**நாம் கேட்பது தான் எப்போது?**
**உங்கள் அன்பான அரவணைப்பை இனி**
**நாம் பெறுவது தான் எப்போது?**
**உங்கள் மதிவதன தரிசனம் இனி**
**எமக்குக் கிடைப்பது தான் எப்போது?**

**விதி செய்த சதியால் வாழ்வு கனவாகி விட்டது!**

*உங்கள் ஆத்மா பரிபூரண சாந்தி அடைவதற்கு எல்லாம் வல்ல இறைவனை மனமுருகிப் பிரார்த்திக்கின்றோம்.*

இன்று (06-06-2001) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் அதைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

***கணவர் :*** சி.குமாரசுவாமி (ஓய்வுபெற்ற ஆசிரியர்)
***மக்கள் :*** கமலாசனி, பகீரதியம்மா, சோதிராணி, தங்கேஸ்வரி, கதிரமலைநாதன், தில்லைநாயகி, கோணேஸ்வரி, தேவகுஞ்சரி
***மருமக்கள் :*** சிவபாதம், கந்தஞானி, சணமுகராஜா, திருநாவுக்கரசு, ஸ்ரீவதனி, திலக்சுந்தரராசா, மதிவாணன்.
***பேரப்பிள்ளைகள் :*** சந்திரன், தமயந்தி, சுதாகரன், மணிமாலா, கணேசன், கவிதா, முகுந்தன், நிசாந்தன், கஜனி, நிர்த்திகா, சுவர்ணா, அருட்செல்வன், சிவச்செல்வன், தவச்செல்வன், தமிழ்ச்செல்வன், கலைச்செல்வன், திலக்ஷன், ம்திலக் ஷணா, தர்மிகா.
***பூட்டப்பிள்ளைகள் :*** கிறிஸ்ரிக்கா, கவீன்.

*பத்தமேனி,*
*அச்சுவேலி*

(88686)

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா நல்லையா

புங்குடுதீவு - 09ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் புங்குடுதீவு - 04ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமான கநதையா நல்லையா (பிரபல வர்த்தகர்) தெமட்டகொட, கொழும்பு - 09 இல் 04-06-2001 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் மனோன்மணியின் கணவரும் காலஞ்சென்றவர்களான கந்தையா - இராசம்மா ஆகியோரின் அருமை மகனும் செல்லையா - சின்னப்பிள்ளை ஆகியோரின் அருமை மருமகனும் இரஞ்சிதமலர் (ராணி), சந்திரபாலன், சிவபாலன் (Australia), ரஞ்சினி, ரஜனி (Canada), கலாராணி (Canada), ஜெயந்திரபாலன் (Australia) ஆகியோரின் தந்தையாரும் தாமோதரம்பிள்ளை, காலஞ்சென்ற பாக்கியம், சோமசுந்தரம் ஆகியோரின் சகோதரனும் மகேந்திரன், சிவகுமாரி, ஸ்ரீறஜனி, கணேசலிங்கம், இரவீந்திரன், சிறீதரன், சுபாஷினி ஆகியோரின் மாமனாரும் சர்மிளா, யஜீவன், லாவணியா, கார்த்திகா, பிரசாத், அனுசாத், அசோக், துவாரகா, பிரதாபன், பிரவீனன், றஜீந்திரதாஸ், பபிதா, சியாளினி, சிந்துஜா, இனோஜ், நிவிதா, நிரோஜ், மதுரா ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான சோ.க.ஐயம்பிள்ளை, பாலாமணி, நமச்சிவாயம், தனலட்சுமி, சீதாலட்சுமி மற்றும் கனகசபாபதி, மகாதேவன், தனபாலசிங்கம், கமலேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரத்தின மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று (06.06.2001) புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு கனத்தை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*59/18, ஸ்ரீமஹிந்த தர்மமாவத்தை,*
*தெமட்டகொட,*
*கொழும்பு - 09.* ***T.P: 671170***

தகவல்:
**ந.சந்திரபாலன்**
**(மகன்)**

(88732)

### சந்தியாப்பிள்ளை யோசப்

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சந்தியாப்பிள்ளை யோசப் நேற்று (05.06.2001) செவ்வாய்க் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சந்தியாப்பிள்ளை - மரியம்மாவின் அன்பு மகனும் விக்ரோரியாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற அலெக்சாண்டர் (போக்குவரத்து முன்னாள் அதிகாரி, AIR CEYLON), திருச்செல்வம் (கொழும்பு), விக்டர் (ஜேர்மனி), செல்வநாயகம் (பொறியியலாளர், லண்டன்), மரியதாஸ் (கல்வித்திணைக்கள அதிகாரி, திருமலை), அன்ரனிதாஸ் (கொழும்பு), டெயல், மேசி, சேவியர் (கனடா), ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், காலஞ்சென்ற புதுமைராணி, மரியதாஸ், மற்றும் கிறேஸ்மலர், றமணகுமாரி, காமலின், கொறற்றி, றமணதாசன் (ஆசிரியர், யா/இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும் அன்பழகன் (பொறியியலாளர் - கனடா), மதியழகன்(பொறியியலாளர் - சிங்கப்பூர்), ஜொய்சி, கனிசியஸ், ஜஸ்மின், றொக்சி, றொடிசன், ஷைலா, கோகுலன், நிமலன், ஆனந், லைறிசின், பவித்திரா, தெரன்சன், அலெற்றா, இமாகுலேற்றா, பிரசாந்தி, ஜொபித்தா, றெஜிஸ்ரன், கிறிசாந்தி, நிஷாந்தன், நிரோசினி, சுகிர்தன், பிருந்தன், சிந்துஜன், மரியநேசன், டிரேசி ஆகியோரின் அன்புப் பேரனும், யோசுவாசந்தோஷ் (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புப் பாட்டனும் மலர், சூசைப்பிள்ளையின் பெரிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் குறித்த விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*77A, கோயில் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
**மனைவி விக்ரோறியா,**
**பிள்ளைகள்.**

(88736)


## நாவலர்

**ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்**
**A/L 2003**
**கணித, விஞ்ஞானப் பிரிவு**

**CHE-** திரு. அன்பு
TUE., THUR. 6.30 -7.30 a.m.
FRI. - 3 -5p.m.

**C.MATHS-** திரு.ஜெயக்குமார்
TUE. 4-5p.m., FRI. 5-6 p.m.

**BIO. -** திரு.அல்போன்ஸ
SAT., SUN. - 6.30 -7.30 am

நடைபெறும் இரசாயனவியல் வகுப்புகள்
Organic - Tue.,Wed.-4 - 5 p.m.
Physical paper - Tue., Fri. 5-6 p.m.
General- Fri. 3 - 5 p.m.
Basic - Tue.,Thu. - 6.30 - 7.30 a.m.

## ராஜா

யாழ்ப்பாணம்

இன்று முதல்
பிரசாந்த், கரண்,
சிம்ரன், விவேக்,
மற்றும் பலர் நடிப்பில்

தினசரி காட்சிகள : 10.30, 2.30 (புதியநேரம்)
சனி, ஞாயிறுகளில் :10.30, 2.00, 5.00 (பு.நே.)

(C/17000)

## நாகம்ஸ்

சுன்னாகம்

இன்று முதல்
அர்ஜுன், அபிதா,
பிரகாஷ்ராஜ் நடித்த

**வானவில்**

(ரீல்ஸ்)

தினசரி: 11.00, 2.30 (புதிய நேரம்)

(88694)

மாகாண மட்ட போட்டிகளுக்கு பலநூற்றுக் கணக்கில் படையெடுப்பு

# திருமலை செல்லும் போக்குவரத்துச் செலவை அமைச்சர் டக்ளஸ் வழங்க இணக்கம்

யாழ்ப்பாணம்,ஜூன்6

வடக்கு - கிழக்கு மாகாண மட்டப் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக திருகோணமலைக்குச் செல்லும் யாழ். மாணவர்கள், ஆசிரியர்களின் கப்பல் போக்குவரத்துக்கான செலவை வழங்குவதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இணங்கியுள்ளார் என வடமாகாண அதிபர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

இமமாதம் 19ஆம் திகதி திருகோணமலையில் நடைபெறவுள்ள மாகாணமட்ட பெரும் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளவென சுமார் 325 பேர் அடங்கிய குழுவொன்று அங்கு செல்லத் தயாராகி வருகிறது.

இதுகுறித்து வட மாகாண அதிபர்கள் சங்கப் பிரதிநிதிகள் அமைச்சர் டக்ளஸ தேவானந்தாவுடன் தொடர்பு கொண்டபோதே இது தொடர்பான இணக்கப்பாடு காணப்பட்டதாக அதிபர்கள் சங்கத்தலைவர் க.இராசதுரை தெரிவித்துள்ளார்.

எனவே 19ஆம் திகதி திருமலையில் நடைபெறவிருக்கும் போட்டிகளில் கலந்து கொள்ளச் செல்பவர்கள் எதிர்வரும் 12ஆம் திகதி தமது விவரங்களையும் பாதுகாப்பு அனுமதியையும் யாழ். மத்திய கல்லூரியில் வடமாகாண அதிபர்கள் சங்கத் தலைவரிடம் பதிவு செய்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேசமயம் -

மாகாண மட்டப் போட்டியில் பங்குபற்றச் செல்லும் யாழ்.மாவட்ட வீரர்களைத் தெரிவு செய்து தயார்ப் படுத்திக் கூட்டிச் செல்லும் உத்தியோகபூர்வ பொறுப்புடைய கல்வி வலயங்களின் உடற்கல்விப் பிரிவின் வட்டாரங்கள் மொத்தம் 540 மாணவர்கள் மாகாணமட்டப் போட்டியில் பங்குபறறுவதற்குத் தகுதி பெற்றிருப்பதாகவும் -

அவர்களை மாகாணமட்டப் போட்டிக்காகத் திருகோணமலைக்கு அனுப்பி வைக்கும் நடவடிக்கைகளை வடமாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபை ஊடாக எடுப்பதற்கு உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் -

இலவசப் பயண வசதிகளைச் செய்து தருவதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அமைச்சு இணக்கம் தெரிவித்திருப்பது பற்றிய தகவல் கடந்த வாரமே தங்களுக்குத் தெரிவிக்கப்பட்டு விட்டதாகவும் - உதயனுக்குத் தெரிவித்தன.

(உ-கு-7)

# நம்பிக்கையில்லாப் பிரேரணைப் போருக்கு தயாராகி வருகின்றன ஐ.தே.க. - பொ.ஐ.மு.

## பிரதமரின் கூற்றை 'பகற்கனவு' என்கிறார் அத்துக்கோறளை

ஐ.தே.க. சமர்ப்பிக்கவிருக்கும் அரசுக்கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பான மோதல்கள் தற்போது தீவிரமடைந்து வருகின்றன. இது தொடர்பான நடவடிக்கைகள் வெற்றிகரமாக முன்னேறி வருவதாக ஐ.தே.கவின் பிரதித் தலைவர் கரு ஜயசூரியவும் எதிர்க்கட்சியில் பிளவு ஏற்படும் என்று பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கவும் எச்சரிக்கை செய்ததுடன் விவகாரம் சூடு பிடித்துள்ளது.

கரு ஜயசூரிய கொழும்பு ஆங்கில பத்திரிகை ஒன்றுக்கு தெரிவிக்கையில், தாம் இம் மாதம் மூன்றாம் வாரத்தில் பிரேரணையை சமர்ப்பிக்கவிருப்பதாகவும் அரசாங்கத்தை தோற்கடிப்பதில் தமக்குப் பெரும் நம்பிக்கையிருப்பதாகவும் கூறினார்.

தாம் முதலில் பிரேரணையை முழுமையாக படித்தறிந்த பின் அரசியற்குழு இது பற்றி முடிவு செய்யும் என்று ம.வி.முன்னணியின் எம்.பி. விஜித ஹேரத் குறிப்பிட்டுள்ளார்.

ஏனைய சிறுபான்மை இன கட்சிகளான முஸ்லிம் காங்கிரஸும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸும் தாம் அரசுக்கு பக்கபலமாக இருப்பதாக தெரிவித்துள்ளன.

மத்துகமவில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசிய பிரதமர் நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் தினத்தன்று ஐந்து ஐ.தே.க. எம்.பிக்கள் தமது பதவிகளை இராஜினாமாச் செய்துவிட்டு வெளியேறுவர் என்றும், அரசு கட்சிமாறுவதை அனுமதிக்கும் சட்டத்தை நிறைவேற்றும் என்றும் அறிவித்துள்ளார்.

ஐ.தே.க பிளவுபட்டு சிலர் அரசுக்கு ஆதரவு தருவர் என்றும் இதனால் பலமானதொரு தேசிய அரசு அமைய வாய்ப்பு உண்டு என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை ஐ.தே.க துணைத் தலைவர் காமினி அத்துக் கோறளை, பிரதமர் பகற்கனவு காணுகிறார் எனக் கூறுகிறார்.

(க)


சுடர் ஒளி

இவ்வாரத்துச் சுடர் ஒளியில்

☆ புலிகள் தாக்கலாம் என்று வடக்கில் படைகள் உஷார்!

☆ தற்காலிக தடை நீக்கம்: புலிகளிடம் எடுபடவில்லை

☆ தென்மராட்சிக்கு வரும்படி படை அழைப்பு; புலிகள் துப்பு!

☆ கல்முனை கரையோர மாவட்டம்: கோருவது ஏன்? எதிர்ப்பது ஏன்?

☆ அடக்குமுறை அரசுகளின் ஆயுதமே ஆதரவுக் குழுக்கள்!

☆ ஆளுநர் பாத்திமா பீபியின் பதவி ஆட்டம் காண்கிறது

☆ கண்ணன் காமுகனா? பெண்களின் ஆடைகள் திருடிய கள்வனா?

☆ பிரிட்டிஷ் பொதுத் தேர்தலில் பிளேயர் தனிக்காட்டு ராஜா!

☆ முத்தமிடும் ரோஜா இதழ்கள் - தொடர்கதை, சிறுகதை, க்ரைம் உட்பட மற்றும் சுவையான அம்சங்கள்.



விஷேட சலுகை விலையில்

MIPAQ PENTIUM III 733 MHZ
- Gigabyte Main Board
- 64 MB Ram
- 20.4 GB HDD
- 8 MB AGP
- 14" Monitor
- ATX Power
- PS/2 Keyboard & Mouse
- 52X CD-Rom
- 32 Bit Sound Card, Speakers
- 56 K Modem

Rs. 59,500.00 Upwards

Printers, UPS, Scanners
மிகக் குறைந்தவிலையில்

Tamil MP3 CD's, Software CD's, Games CD's

மிகக் குறைந்தவிலையில் இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட தமிழில் Software தமிழில் Word

MIPAQ CELERON 566 MHZ And MIPAQ CYRIX 333 MHZ With above configuration

Sole Agent For MPAQ Computers In Srilanka.

MICRO PC SYSTEMS

No. 15, 36th Lane, Wellawatte, Colombo - 06.
Telephone : 074 - 513235, 074 - 516764

Branches

No. 82, New Chetty Street
Kotahena, Colombo - 13
Telphone : 074 - 619673
Web : www.mipaq.com

No. 09, Modern Market
Hospital Road,
Jaffna.
Telphone : 021-2067



தேவை

T.P ,போட்டோ கொப்பி இயந்திரம் இயக்கத் தெரிந்த பெண்கள் தேவை.
விண்ணப்ப முடிவு திகதி:- 09.06.2001

தொடர்பு கொள்ளவும்:-
தி.கஜன்,
12/5 சந்தன மாதா கோயில் வீதி,பாண்டியன்தாழ்வு.
(88718) T.P 2336



நாளை ஆரம்பம்
மாணவ மணிகளே!
O/L இல் ஆங்கிலம் சித்தி பெறவில்லையா?
உங்களுக்காகவே புதிய பிரிவு
செவ் - வியா - 4 - 6
ஆரம்பம்: 7/6/2001
ஆசிரியர்:
A.V.மகாதேவன்
SUBRA (14)
சித்தன்கேணி
(C/16907)



தேவை

புடைவை வியாபார ஸ்தாபனத்துக்கு ஆண் விற்பனையாளர்கள் தேவை. மானிப்பாய் பிரதேச சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

(88715)

தொடர்பு:
தணீஸ் கொமினிக்கேஷன்
மூத்த விநாயகர் கோயிலடி,
ஆனைக்கோட்டை.


கஞ்சிகுடிச்சாறு மோதலில்

# உயிரிழந்த 12 புலிகளின் சடலங்கள் கையளிப்பு

கொழும்பு,ஜூன்6

அம்பாறை, கஞ்சிகுடிச்சாறுப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தாக்குதலில் உயிரிழந்ததாகத் தெரிவித்து படையினர் ஒப்படைத்த 12 புலி உறுப்பினர்களது சடலங்களையும் புலிகளின் பிரதிநிதிகளிடம் ஒப்படைத்து. விட்டதாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பேச்சாளர் ஹர்ஷா குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் ஒரு சடலமும், நேற்றைய தினம் 11 சடலங்களும் இவ்வாறு ஒப்படைக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

(க-7-21)

## முகமாலையில் சிப்பாய் பலி; 3 பேர் காயம்

கொழும்பு,ஜூன்6

தென்மராட்சியில் முகமாலைப் பகுதியில் விடுதலைப் புலிகளால் மறைத்து வைக்கப்பட்டிருந்த பொறிவெடி ஒன்று கடந்த 4 ஆம் திகதி காலை வெடித்ததில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார் என்றும் 3 பேர் காயமடைந்தனர் என்றும் விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

காயமடைந்த படையினர் மூவரும் பலாலி இராணுவ ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் அறிவிக்கப்பட்டது. (க)

## பிரான்ஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்படவுள்ளது.

சர்வதேச இணக்க முயற்சிகளில் ஏற்பட்டுள்ள தேக்கநிலை குறித்து ஆராய்வதற்காக மாநாடு ஒன்றும், தமிழ் மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் கலை நிகழ்வுகளும் அங்கு 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்ச்சிகளில் விசேடமாக இடம்பெறவுள்ளன.

இதேவேளை -

குடாநாட்டில் கடந்த ஜனவரி மாதம் உணர்ச்சி பூர்வமாக ஆரம்பிக்கப்பட்ட 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வு தொடர்ந்து பிரிட்டன், ஜேர்மனி, நோர்வே, டென்மார்க், இத்தாலி, நெதர்லாந்து, சுவிற்சர்லாந்து ஆகிய சர்வதேச நாடுகளிலும் வாழும் தமிழ் மக்களால் எழுச்சி பூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளதாக அங்கு வாழும் தமிழ் அமைப்புகள் அறிவித்துள்ளன. (க-6)

## புலிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டக்கூடிய சட்டப் பிரச்சினைகள் குறிதது ஆராய வேண்டியது அரசாங்கமே தவிர புலிகள் அல்லர்.

விடுதலைப் புலிகள் பேச்சுக்கு விரும்பி வந்தால் அவர்களுக்கு எந்த வித பிரச்சினைகளும் இருக்கப் போவதில்லை - என்றும் நீதி அமைச்சர் பட்டி வீரக்கோன் தெரிவித்ததாக அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

(க-6)

## சிறுவன் படுகாயம்

வீட்டுவளவில் கிடந்த இனந்தெரியாத பொருள் ஒன்றை எடுத்து பரீட்சித்துப் பார்த்த சிறுவன் ஒருவன் அது வெடித்துச் சிதறியதில் படுகாயமடைந்தான்.

இச் சம்பவம் நேற்றுக்காலை 8 மணியளவில் இராணுவக் கட்டுப்பாடற்ற முரசுமோட்டைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

வேலாயுதம் குமார் (வயது 14) என்பவரே இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்தவராவார். (க-7)

## மட்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுப்பி வைக்கப்பட்டன. காயமடைந்த படையினர் கல்குடா முகாமுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து அனுராதபுரம் வைத்தியசாலைக்கு ஹெலி மூலம் கொண்டு செல்லப்பட்டனர்.

காயமடைந்தவர்களை கல்குடாவுக்கு வாகனத்தில் கொண்டு செல்லும் போது வாழைச்சேனை நகரில் வைத்துப் படையினர் சரமாரியான துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டவாறு சென்றதாகக் கூறப்படுகின்றது. இதனால் நகரில் நின்றிருந்த பொதுமக்கள் நாலாபுறமும் சிதறி ஓடினார்கள். நகரில் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

காவத்தமுனையில் அப்பாவிப் பொதுமக்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டிருப்பது தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சாஹிர் மௌலானா வாழைச்சேனைப் பிரதேசத்திற்குப் பொறுப்பான 232ஆவது பிரிகேட் படையணியின் கட்டளையிடும் அதிகாரி கேணல் சி.வீரதுங்காவிடம் ஆட்சேபனை தெரிவித்துள்ளார்.

இநத எறிகணை வீச்சை இராணுவத்தினரே மேற்கொண்டதாக மௌலானா எம்.பி. தெரிவித்துள்ளார்.

கோரகல்லிமடு கண்ணகி அம்மன் ஆலயத்தில் நடைபெறும் உற்சவத்திற்கு விடுதலைப் புலிகளின் தளபதி கருணா வருவதாக தகவல் கிடைத்ததையடுத்தே படையினர் அங்கு செல்ல முற்பட்டதாகவும் - அப்போதே விடுதலைப் புலிகள் மறைந்திருந்து தாக்குதல நடத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(உ-21-7)

# மரண அறிவித்தல்

## சிவசம்பு சிவயோகேஸ்வரன்

*(ஓய்வுபெற்ற பிரதம பிரதித் தபால் அதிபர், யாழ்ப்பாணம்)*

தையிட்டி காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசம்பு சிவயோகேஸ்வரன் (ஓய்வு பெற்ற பிரதம பிரதித் தபால் அதிபர், யாழ்ப்பாணம்) நேற்று (05-06-2001) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சீனிவாசகம் சிவ்சம்பு - சிவசம்பு நாகம்மா (ஓய்வுபெற்ற ஆசிரியர்கள்) ஆகியோரின் அன்பு மகனும் புண்ணியவதியின் (ரதி) அன்புக் கணவரும் திருமதி சண்முகநாதன் சாரதாம்பிகை (கொழும்பு), செல்வி நல்லைநாயகி, காலஞ்சென்றவர்களான சறோஜினி, சிவகாமசுந்தரி சாந்தலிங்கம் மற்றும் சிவானந்தன் (பொறியியலாளர் - லண்டன்), திருமதி நாகேஸ்வரி மகேஸ்வரன் (லண்டன்), திருமதி ரோகினி குலசிங்கம் (ஆசிரியை, யா/ சுதுமலை சின்மய பாரதி வித்தியாலயம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் உரும்பிராயைச் சேர்ந்த காலஞ்சென்ற இராஜரட்ணம் (புண்ணியகோடி), சரஸ்வதி (கனடா) ஆகி யோரின் அன்பு மருமகனும் திருமதி சுஜதா சுரேந்திரன் (கனடா), திருமதி மதுமதி வசந்தகுமார் (ஆசிரியை, யா/ உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் விசுவலிங்கம் சுரேந்திரன் (கனடா), செல்வநாயகம் வசந்தகுமார் (கிராம அலுவலர், உரும்பிராய் தெற்கு) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் திருமதி புஸ்பவதி இராஜேந்திரன் (உரும்பிராய்), தங்கராஜா (ஜேர்மனி), சரஸ்சராஜா (கனடா), றஞ்சிதவதி (கனடா) ஆகியோரின் அருமை மைத்துனரும் நில்க்ஷி (கனடா), அரவிந் (கனடா) ஆகியோரின் அருமைப் பேரனும் ரவி (லண்டன்), சறோ (பிரான்ஸ்), சாந்தி (பிரான்ஸ்), துஷ்யந்தி (லண்டன்), பவின்சி (ஜேர்மனி), டென்சி (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும், தினுசன் (யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவன்), கம்ஷா (கனடா), ரம்மியா (கனடா), சிவகாரணி (லண்டன்), சிவசங்கரி (லண்டன்) ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06-06-2001) புதன்கிழமை மாலை 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உரும்பிராய் வேம்பன் மயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏறறுக்கொள்ளவும்.

தகவல்:
செல்வநாயகம் வசந்தகுமார்
*(மருமகன் - கிராம அலுவலர், உரும்பிராய் தெற்கு)*

*முருகன் வீதி, உரும்பிராய்.*

(C/17009)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.06.2001 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.